வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu — ஈழநாடு





மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 26.08.2024 திங்கட்கிழமை இதழ் : 239 பக்கங்கள் : 12

# நாணய நிதியத்துடன் பகிரங்கமாக உரையாட சஜித், அநுர வரவேண்டும்!

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சவால்



கொழும்பு, ஓக. 26

**மக்களுக்கு பொய் சொல்வதை நிறுத்திவிட்டு, சர்வதேச நாணய நிதியத்துடன் இணையவழி முறையில் பகிரங்க கலந்துரையாடலுக்கு வருமாறு சஜித் பிரேமதாஸ, அநுரகுமார திஸநாயக்க ஆகியோருக்கு சவால் விடுகிறேன் - என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

ஐ. தே. கவின் விசேட சம்மேளன கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில், கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், நாடு வீழ்ச்சியடைந்திருந்த போது யாரும் முன்வராததாலேயே நான் முன்வந்தேன். இலங்கை இல்லாமல் போனால் ஐக்கிய தேசிய கட்சியும் இல்லாமல்போகிறது. ஐக்கிய தேசிய கட்சியை நிர்மாணித்த டி. எஸ். சேனாநாயக்க எமக்குக் கற்றுத்தந்த விடயங்களின் அடிப்படையிலேயே நான் நாடு இல்லாமல்போகும் நிலையில் நாட்டை பாதுகாத்து கட்சியைப் பாதுகாக்க முன்வந்தேன். இந்த விடயங்கள் எம்மில் இருந்து சென்றவர்களுக்கு தெரியாது. அவர்களுக்கு கட்சியின் வரலாறு தெரியாது.

எதிர்வரும் தேர்தல் தீர்மானமிக்க தேர்தலாகும். இதில், நான் வெற்றிபெற

11

## ரணிலுக்கு ஐ. தே. க. பச்சைக்கொடி!

கொழும்பு, ஓக. 26

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுயேச்சையாக போட்டியிடுவதை ஐக்கிய தேசியக் கட்சி ஒருமனதாக அங்கீகரித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று நடந்த விசேட சம்மேளன கூட்டத்திலேயே ஐக்கிய தேசியக் கட்சி இந்த அனுமதியை வழங்கியது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான

11

## தென்னிலங்கை வேட்பாளர்களின் அழைப்புகளுக்கு கூடிப்பேசி முடிவு!

### ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி

- கோகுலன் -

வவுனியா, ஓக. 26

தென்னிலங்கை வேட்பாளர்கள் காத்திரமான பேச்சுக்கு அழைத்தால் அது தொடர்பில் கூடி ஆராய்ந்து முடிவுகளை எடுப்போம் என்று ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி தெரிவித்துள்ளது.

அந்தக் கட்சியின் நிறைவேற்றுக்குழு கூட்டம் நேற்று வவுனியாவில் நடந்தது. இந்தக் கூட்டத்தின் பின்னர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அதன் பேச்சாளர் சுரேஷ் பிறேமச்சந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அந்த சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

இந்தக் கூட்டத்தில், ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகவும் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்திய விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன. பொது வேட்பாளருக்கான பிரசாரங்களை எமது

11

## புத்தர் சிலை கணக்கெடுப்பு; பௌத்த தர்மத்துக்கு ஆபத்து!

### சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு



கொழும்பு, ஓக. 26

கிராமங்களிலும் வீதிச் சந்திகளிலும் அமைக்கப்பட்டுள்ள புத்தர் சிலைகள் கணக்கெடுக்கப்படுகின்றன. இன்று பௌத்தத்துக்கு ஏற்பட்ட ஆபத்து ஏனைய மதங்களுக்கும் ஏற்படலாம் - இவ்வாறு எச்சரித்துள்ளார் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ.

மத சார்பற்ற சமுதாயம் ஒன்றை உருவாக்க அரசாங்கம் முயற்சிக்கின்றது. கிராமங்கள், வீதிச் சந்திகள் தோறும் வைக்கப்பட்டுள்ள புத்தர் சிலைகளை அரசாங்கத்தின் உத்தரவின் பேரில் புத்தசாசன அமைச்சு கணக்கெடுக்கிறது.

இன்று பௌத்த தர்மத்துக்கசே இவ்வாறான

11

## சிறீதரன் எம். பியை பார்த்து ஏனையோர் திருந்தவேண்டும்!

### பொது வேட்பாளர் அரியநேத்திரன்

யாழ்ப்பாணம், ஓக. 26

தமிழ்ப் பொது வேட்பாளரை சிறீதரன் எம். பி. ஆதரிக்கிறார். இதேபோல, ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களும் அவரைப் பார்த்து திருந்த வேண்டும் என்று தமிழ்ப் பொது வேட்பாளர் பா. அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

"நான் எவரையும் வற்புறுத்தி எனக்கு ஆதரவு தாருங்கள் எனக் கூறவில்லை. அவர்களாக

11

## ரணில் தேர்தலில் வென்றதும் பாராளுமன்று கலைக்கப்படும்!

### பிரதமர் தினேஷ் அறிவிப்பு

கொழும்பு, ஓக. 26

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற்றதும் பாராளுமன்றம் கலைக்கப்படும் என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அத்துடன், பாராளுமன்றத் தேர்தலின் பின்னர் மாகாண சபைகளுக்கான தேர்தல்

11

## அன்று காங்கிரஸுக்கு நேர்ந்தது இன்று தமிழ் அரசுக்கு நேரலாம்!

### சிறீநேசன் பகிரங்க எச்சரிக்கை

- அன்ரன் -

மட்டக்களப்பு, ஓக. 26

இந்திய மக்களின் குடியுரிமை பறிக்கப்பட்டபோது தமிழ்க் காங்கிரஸ் கட்சி உடைந்து இலங்கை தமிழ் அரசுக் கட்சி உருவானது. தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்காதுவிடின், இலங்கை தமிழ் அரசுக் கட்சிக்கும் இதுதான் நடக்கும் - இவ்வாறு தமிழ்

11

## காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் கிளிநொச்சியில் வெள்ளியன்று போராட்டம்!

கிளிநொச்சி, ஓக. 26

சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோருக்கான தினமான எதிர்வரும் 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை கிளிநொச்சியில் போராட்டம் நடைபெறவுள்ளது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத்தின் அழைப்பிலேயே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் அருகே ஆரம்பமாகும் போராட்டப் பேரணி டிப்போ சந்தியில் நிறைவுறும். பேரணியின் இறுதியில் ஐ. நா. மனித உரிமைகள் பேரவைக்கான மனு அதன் பிரதிநிதிகளிடம் வழங்கப்படும் - என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## தமிழ் பொது வேட்பாளருக்கு 50 வீத வாக்குகள் கிடைக்கும்!

### ஈ. பி. ஆர். எல். எவ். கட்சி

- கோகுலன் -

வவுனியா, ஓக. 26

தமிழ்ப் பொது வேட்பாளர் பா. அரியநேத்திரனுக்கு வடக்கு - கிழக்கில் உள்ள 12 இலட்சம் வாக்குகளில் 50 வீதமான வாக்குகள் கிடைக்கும் என்று ஈ. பி. ஆர். எல். எவ்வின் பொதுச் செயலாளர் சிவசக்தி ஆனந்தன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வஜன வாக்கெடுப்பை கோராவிடின் தமிழ் பொது வேட்பாளரை எதிர்ப்போம்!

## எம். கே. சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 26

சர்வஜன வாக்கெடுப்பு தேவை என தமிழ் பொது வேட்பாளர் நேரடியாக கேட்கத் தவறின், பொது வேட்பாளருக்கு எதிராக நாம் செயல்பட வேண்டும் என்று பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

தமிழ்ப் பொது வேட்பாளரை முன்னிறுத்தி என்ன கோரிக்கையை முன்வைக்கப் போகிறோம் என்பதே முக்கியம். இனப் பிரச்னைக்கு இது வரை தீர்வு இல்லை. அது இனியும் கிடைக்கப்போவதில்லை.

எனவே, தமிழ் மக்களாகிய நாம் இலங்கைக்குள் எமக்கு தீர்வு இல்லை என்பதனை சர்வதேச சமூகத்துக்கு சொல்ல வேண்டும். நாங்கள் தேசியம், தாயகம், சுயநிர்ணய உரிமை பற்றி தந்தை செல்வா காலத்தில் இருந்து பேசி வருகிறோம்.

அதனால் தமிழ் மக்களுக்கு என்ன வேண்டும் என்பதனை தமிழ் மக்கள்தான் தீர்மானிக்க வேண்டும். ஆனால், இன்று கட்சிகள் அதனை தீர்மானிக்க முயல்கின்றன. தமிழ் மக்களுக்கு என்ன தேவை என்பதனை பொது வாக்கெடுப்பு மூலமே அறிய முடியும்.

பொது வாக்கெடுப்பை நடத்த வேண்டியது சர்வதேச சமூகம். ஆனால், நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் பொது வாக்கெடுப்பாக அமையாது. அதனை பயன்படுத்தி எமது கோரிக்கையை நாம் சர்வதேச சமூகத்துக்கு தெரியப்படுத்த வேண்டும்.

எனவே சர்வஜன வாக்கெடுப்பு வைக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்க வேண்டும். அவ்வாறான கோரிக்கை இல்லாமல் தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவதில் அர்த்தம் இல்லை.

கேட்க வேண்டியதை கேட்காது, ஒளித்து - மறைத்து தமிழ் பொது வேட்பாளர் செயல்படுவாராயின் நாம் கடுமையாக எதிர்ப்போம் - இவ்வாறு நேற்று முன்தினம் நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஐ)

# வெளிநாடு அனுப்புவதாகக் கூறி மோசடி செய்த பெண் கைதானார்!

யாழ்ப்பாணம், ஓக. 26

வெளிநாட்டுக்கு அனுப்பி வைப்பதாகக் கூறி இளைஞனிடம் சுமார் 15 இலட்சம் ரூபாய் மோசடி செய்த பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெளிநாட்டுக்கு அனுப்பி வைப்பதாகக் கூறி கொழும்பில் தற்போது வசித்து வரும் பெண்ணொருவர் யாழ்ப்பாணத்தை சேர்ந்த இளைஞனிடம் சுமார் 15 இலட்ச் ரூபாய் வரையில் பெற்று மோசடி செய்துள்ளார்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட இளைஞன் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். கொழும்பில் வசித்து வந்த பெண் யாழ்ப்பாணம் வந்து தங்கியிருந்த நிலையில் கைது செய்யப்பட்டார்.

கைதான பெண்ணிடம் விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார், விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

# ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் நிறைவேற்றுக்குழு நேற்றுக் கூடியது!

வவுனியா, ஓக. 26

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் நிறைவேற்றுக் குழு கூட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் நடைபெற்றது.

வவுனியாவிலுள்ள தனியார் விடுதியில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், ஜனாதிபதி தேர்தல் தொடர்பாகவும் ஜனாதிபதித் தேர்தலிலே போட்டியிடுகின்ற தமிழ்ப் பொது வேட்பாளருக்கான தேர்தல் பிரசாரங்களை முன்னெடுக்கும் ஒழுங்குமுறை தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டிருந்தது.

இந்தக் கலந்துரையாடலில் ரெலோ கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், கோவிந்தன் கருணாகரம் எம். பி., ஈ. பி. ஆர். எல். எவ் கட்சியின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன், சிவசக்தி ஆனந்தன், ஜனநாயக போராளிகள் கட்சியின் ஊடகப்பேச்சாளர் துளசி மற்றும் புளொட் கட்சியை க. சிவநேசன் உட்பட பலர் பங்கேற்றனர். (ஐ)

# வற் உட்பட சகல வரிகளும் எமது அரசில் நீக்கப்படும்!

## அநுரகுமார மீண்டும் உறுதி

கொழும்பு, ஓக. 26

2023 ஆம் ஆண்டு முதல் சுகாதார சேவைக்கு வற் வரி விதிக்கப்படுகிறது. ஆகவே, எமது அரசாங்கத்தில் வற் உள்ளிட்ட சகல வரிகளும் நீக்கப்படும் - என்று தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

வெல்லவாய பகுதியில் நேற்றுமுன்தினம் நடந்த மக்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நமது நாடு கடனை மீளச் செலுத்த முடியாத அளவுக்கு ஒரு வறுமையான நாடாக உள்ளது. முற்றிலும் கடலால் சூழப்பட்டிருந்தாலும் உப்பை இறக்குமதி செய்யும் நிலையில் நாடு உள்ளது. எனினும் மகிந்த, சஷீந்திர, நாமல் மற்றும் ரணில் போன்றவர்கள் செல்வந்தர்களாக உள்ளனர்.

ரணில் ஜனாதிபதியாகும்போது சாகல ஆலோசகராகிறார். அவரின் சகோதரர் இலங்கை வங்கியின் தலைவராகிறார்.

எனவே, ஒருவர் நாட்டை ஆட்சி செய்யும்போது அவரின் குடும்பமே பொறுப்புகளை ஏற்கின்றன. 2023 ஆம் ஆண்டு முதல் சுகாதார சேவைக்கு வற் வரி விதிக்கப்படுகிறது. ஆகவே, எமது அரசாங்கத்தில் வற் உள்ளிட்ட சகல வரிகளும் நீக்கப்படும் - என்றார். (ஐ)

# பணவீக்கத்துக்கு ஏற்றவாறு அரச ஊழியருக்கு வேதனம்!

## இது நாமலின் வாக்குறுதி



கொழும்பு, ஓக. 26

பணவீக்கத்துக்கு ஏற்ப அரச பணியாளர்களுக்கான வேதனத்தை அதிகரிக்கக் கூடிய பொறிமுறை உருவாக்கப்படும் என சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

திவுலப்பிட்டியில் நடந்த பிரசார கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த காலங்களில் எரிபொருள் மற்றும் எரிவாயுவுக்கான வரிசைகள் ஏற்பட்டிருந்தன. எனினும், கடவுச்சீட்டு, தேசிய அடையாள அட்டை மற்றும் சாரதி அனுமதிப்பத்திரங்களுக்கான வரிசைகளை ஏற்படுத்த ஒருபோதும் இடமளிக்க முடியாது.

அதற்காக தொழில்நுட்பத்துடன் இணைந்த புதிய வேலைத்திட்டங்கள் உருவாக்கப்படும். தேர்தல் காலங்களில் தேர்தல் மேடைகளில் வேதனங்களை அதிகரிப்பதாக வாக்குறுதியளிக்கும் கலாசாரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும்.

அத்துடன், எதிர்வரும் 5 வருடங்களில் 10 இலட்சம் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும் - என்றும் கூறினார். (ஐ)

# அநுரவின் தேர்தல் அறிக்கை இன்று வெளியிடப்படுகிறது

கொழும்பு, ஓக. 26

தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனம் இன்று திங்கட்கிழமை வெளியிடப்படவுள்ளது. இதேநேரம், ஐக்கிய மக்கள் சக்தியின் விஞ்ஞாபனம் நாளை மறுநாள் வெளியிடப் படவுள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பர் 21ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. இதில், தேசிய மக்கள் சக்தியின் சார்பில் அநுர குமார திஸநாயக்க வேட்பாளராகக் களமிறங்குகிறார்.

இந்த நிலையில், அவரின் கட்சியின் தேர்தல் அறிக்கை இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு வெளியிடப்படவுள்ளது. இந்த நிகழ்வு கொழும்பு - இம்பீரியல் ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

இதேவேளை, சஜித் பிரேமதாஸவின் தேர்தல் விஞ்ஞாபனம் நாளை மறுதினம் புதன்கிழமை வெளியிடப்படவுள்ளது. நேரம் மற்றும் இடம் விரைவில் அறிவிக்கப்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் நடவடிக்கைகளின் தலைவர் சுஜீவ சேனசிங்க தெரிவித்தார். (ஐ)

# மக்கள் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யக்கூடிய தலைவர் அநுரவே

## சந்திரசேகரன் சொல்கிறார்

யாழ்ப்பாணம், ஓக. 26

நாட்டை வழிநடத்த இலஞ்சம், ஊழலற்ற தலைவர் வேண்டுமென்ற மக்களின் எதிர்பார்ப்பை வெற்றிகொள்ளக் கூடியவர் ஒரேயொரு தலைவரே. அவர் அநுரகுமார திஸநாயக்க மட்டுமே - என்று தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்தார்.

திருநெல்வேலியில் தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசார பணிமனையை திறந்து வைத்து உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், நாட்டில் வாழ்கின்ற தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களிடம் பல ஆண்டுகளாக ஏக்கம் இருக்கிறது. நாட்டைக் காப்பாற்ற சிறந்த தலைவர் வேண்டும். 70 வருடகாலமாக நாட்டை ஆட்சி செய்தவர்கள் பல்வேறு வழிகளிலும் நாட்டை சூறையாடியுள்ளனர். திருடியவர்களால் நாட்டை மீட்கமுடியவில்லை.

மக்களின் வாக்குகளை சிதறடிப்பதற்காக பல சுயேச்சை வேட்பாளர்கள் ஜனாதிபதி தேர்தலில் களமிறக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும். நாட்டை வழிநடத்த இலஞ்சம் ஊழல் அற்ற தலைவர் வேண்டுமென்ற மக்களின் எதிர்பார்ப்பை வெற்றிகொள்ளக் கூடியவர் ஒரேயொரு தலைவரே. அவர் அநுரகுமார திஸநாயக்க மட்டுமே.

ஆகவே, எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் அநுர குமாரவை வெற்றிகொள்ள வைப்பதன் மூலம் நாட்டு மக்களை வெல்ல வைப்போம் - என்றார். (ஐ)

# நல்லூர் பெருந்திருவிழாவில் இன்று!

யாழ்ப்பாணம், ஓக. 26

நல்லூர் பெருந்திருவிழா நாட்களில் சிறீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணி மண்டபத்தில் தினமும் பிற்பகல் 3 மணி தொடக்கம் 5.30 மணி வரை கூட்டுப் பிரார்த்தனை நடைபெற்று வருகின்றது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் நடைபெறும் இந்த நிகழ்வில் இன்று திங்கட்கிழமை சைவப்புலவர் திருமதி சண்முகவடிவு தில்லைமணி பஜனை குழுவினரின் நிகழ்வு நடைபெறவுள்ளது என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ய. அநிருத்தனன் அறிவித்துள்ளார். (ஐ)

• • •

யாழ்ப்பாணம், ஓக. 26

நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் சிறப்பு நிகழ்வுகளை ஒழுங்கு செய்து நடத்தி வருகின்றது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் நடத்தப்படும் இந்த நிகழ்வில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் சிறப்பு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் இரண்டாவது குருமகா சந்நிதானம் சிறிலசிறீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீன சிவாய சுப்பிரமணிய சுவாமிகளின் சீடர் தொண்டு நாதன் சுவாமிகள் ஆகியோர் திருமுன்னிலை வகிக்க நிகழ்வு ஆரம்பமாகும்.

சுன்னாகம் கதிரமலை சிவன் தேவஸ்தான பிரதம குருக்கள் முத்தமிழ் குருமணி கலாநிதி நா. சர்வேஸ்வர குருக்கள் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், உடுவில் பிரதேச செயலாளர் பாலசுந்தரம் ஜெயகரன் பிரதம அதிதியாகவும் புத்தூர் சோமாஸ்கந்த கல்லூரி அதிபர் சின்னத்தம்பி திரிகரன், கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை அதிபர் திருமதி கவின்ஜா நவஜீவா ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும் பங்கேற்பர்.

இதில், இணுவில் பரராஜசேகர பிள்ளையார் அறநெறி பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் விசேட நிகழ்வாக மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவர்களின் இசைக்கச்சேரியும் நடைபெறவுள்ளன என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் ய. அநிருத்தனன் தெரிவித்துள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
26.08.2024 திங்கட்கிழமை
குரோதி வருடம், ஆவணி 10

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 205 2300**

# ஹக்கீம் எதிர்பார்க்கும் சாணக்கியம்

வடக்கு, கிழக்குத் தமிழ் மக்கள் சாணக்கியமாக முடிவு எடுப்பார்கள் - தமிழ்ப் பொது வேட்பாளர் முடிவு தவறானது என்று அவர்கள் புரிந்துகொள் வார்கள் என்று முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்திருக்கின்றார். சுமந்திரன்களும் சாணக்கியன்களும் திட்டமிட்ட வகையில் தமிழ்ப் பொது வேட்பாளரை எதிர்த்து வருவதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. ஆனால், ஹக்கீம் ஏன் இந்த விடயத்தில் இந்தளவு கரிசனை காண்பிக்கின்றார்? தமிழ்ப் பொது வேட்பாளர் நிலைப்பாடு இலங்கையின் அனைத்துத் தரப்புகளையும் திருப்பிப் பார்க்க வைத்திருக் கின்றது என்பதில் சந்தேகமில்லை. ஆனால், அது சாணக்கியமான தீர்மானமா அல்லது இல்லையா என்பதை வரலாறு தீர்மானிக்கும்.

ஆறு தமிழ்க் கட்சிகள் இணைந்து இந்தியப் பிரதமர் மோடிக்குக் கடிதம் எழுதும் விடயத்தில் - ஆரம்பத்தில் ஹக்கீமும் இணைந்து செல்லும் முடி வில் இருந்தார். ஆனால், பின்னர் அதிலிருந்து நழுவிக்கொண்டார் - காரணம் என்ன? சமஷ்டி அடிப்படையிலான கோரிக்கையை உள்வாங்கு வது என்னும் தீர்மானம் எடுக்கப்பட்ட பின்னர் ஹக்கீம் அதிலிருந்து விலகிக் கொண்டார் ஏன்? அவர் சாணக்கியமாக நடந்து கொண்டாரென நாங்கள் எண்ணிக்கொள்ளலாம். இதேபோன்றுதான், கிழக்கு மாகாண சபை முதலமைச்சர் விவகாரத்தின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து கிழக்கு முதலமைச்சர் பதவியைத் தங்கள் வசமாக்கினார். பின்னர் ஒரு கூட்டத்தில் பேசுகின்றபோது பார்த்தீர்களா எங்கள் சாணக் கியத்தை என்று கூறி தங்கள் சாணக்கியத்தை மெச்சினார்.

ஏனெனில், முஸ்லிம் காங்கிரஸ் கட்சி கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவியை தன்வசப்படுத்தியபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு பதினொரு ஆசனங்கள் இருந்தன. ஆனால், முஸ்லிம் காங்கிரஸிடம் ஏழு ஆசனங்கள்தான் இருந்தன. ஆனாலும், கூட்டமைப்பு முஸ்லிம் காங்கி ரஸ்க்கு முதலமைச்சர் பதவியை விட்டுக்கொடுத்தது. ஆனால், அதனையே பின்னர் தங்களின் சாணக்கியம் என்றார் ஹக்கீம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஏமாற்றும் சாணக்கியம் தெரிந்த ஹக்கீம் தமிழ் மக்கள் சாணக்கியமாக முடிவெடுப்பார்கள் என்று கூறு கின்றார். இதன்மூலம் தங்களின் அரசியல் நலன்களுக்கு ஏற்றவாறான தென்னிலங்கை ஆட்சியாளர் ஒருவரை தெரிவு செய்வதற்கு தமிழ் மக்களின் வாக்குகளை தாரைவார்க்குமாறு கூறுகின்றார். தமிழ் மக்கள் தங்களின் தன்மானத்தை ஏலம்விட்டு முஸ்லிம்களின் நலன்களுக்காக வாக்களிக்க வேண்டும். அவ்வாறு வாக்களித்தால் அதுதான் சாணக்கிய மான முடிவு.

தமிழ் மக்கள் மத்தியில் சாணக்கியமான தலைவர்கள் என்று கருதப் பட்டவர்கள் அனைவருமே அரசியலில் பிழைத்துப் போனவர்கள்தான். இதனால்தான், இப்போது சாணக்கியம் என்றால் என்ன என்பதே தெரியா மல் போய்விட்டது. ஓர் இனத்துக்கான சாணக்கியம் என்பது என்ன? நெருக் கடிமிக்க காலங்களில் ஒரு மக்கள் கூட்டம் எவ்வாறு தனது இருப்பைத் தக்கவைத்துக் கொள்கின்றது. அதற்காக எவ்வாறான உத்திகளை கையாள் கின்றது என்பதில்தான் அந்த இனத்தின் சாணக்கியம் வெளிப்படும். அவ்வாறில்லாது, நெருக்கடிகளின்போது எவ்வாறு முடிவெடுப்பது என்று தெரியாமல் தமக்குள் தடுமாறி - நிலைகுலைந்து - தங்களுக்குள்ளேயே அதிக எதிரிகளை உருவாக்கிக் கொள்ளுமாயின் அவ்வாறானதோர் இனம் - சாணக்கியம் என்னும் சொல்லையே அறியாத இனமாகவே இருக்க முடியும்.

ஒரு காலத்தில் கல்வியில் முன்னேறிய இனமாக பெருமை கொண்டி ருந்த தமிழினம் அரசியலில் தொடர்ந்தும் பின்னடைவுகளை மட்டுமே சந்தித்துக் கொண்டிருக்கின்றது. இந்தப் பின்புலத்தில் நோக்கினால் தமி ழினம் சாணக்கியமான ஓர் இனமல்ல. இதனால்தான் ஹக்கீம் தமிழ் மக்கள் சாணக்கியமாக முடிவெடுப்பார்கள் என்கிறார். ஏனெனில், தமிழ் மக்கள் அவ்வாறான முடிவை எடுக்கும் வல்லமையுள்ள ஓர் இனமல்ல என்பது தான் ஹக்கீமின் கணிப்பு போலும். தமிழ்ப் பொது வேட்பாளர் பெரும் பான்மையான வாக்குகளைப் பெறாமல் போனால் தமிழ் மக்கள் ஒரு சாணக்கியமான மக்கள் கூட்டமல்ல என்பது மீண்டுமொரு முறை நிரூபிக்கப்படும்.



## நல்லூரரான் திருவடி - 18

# சிவனொளிபாத மலை தேநீர் கடை!

**பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன்**

ஒருமுறை யாழ்ப்பாணம் சென்று யோகர் சுவாமிகளைத் தரிசித்த போது சிரித்துக்கொண்டே, “மகனே, சிவனொளிபாதமலைக்குப் போய்வர லாமா?”என்று கேட்டார். நான் கொஞ்சம் அஞ்சினேன். மலையின் மேலிருக்கும் அந்த இடத்துக்கு செல்வதற்கு ஒழுங்கான பாதை அமைப்பு அப்போது இருக்கவில்லை. பாறைகளைக் கடந்து, கரடுமுரடான பாதை களில் ஏறிச்செல்ல வேண்டும். சுவாமிகளோ வயோதிபர். என்ன செய்வதென்று தெரியா மல் ஒப்புக்கொண்டேன். அம்மாமலைமீது ஏறிச் செல்வதானால் ஏறஇறங்கவே பல மணி நேரமாகும். வழியில் சாப்பிடுவதற்கு ஒன்றுமிராது. எனவே, சுவாமிகள் குறித்த நாளில் ஒரு சட்டி நிறைய இடியப்பமும் சொதியும் தயார் செய்து மோட்டார் காரின் பின்புறத்தில் வைத்துவிட்டு, சுவாமிகளும் நானும் மலையடிவாரத்தை சென்றடைந் தோம்.

அங்கே காரிலிருந்து இறக்கிய இரு பாத்திரங்களையும் பார்த்து, “என்ன மகனே, இது?” என்று சுவாமி கேட்டார். “மதிய உணவுக்காகக் கொண்டுவந்தேன்” என்று கூறியபோது சுவாமி சிரித்தார். பின்னர், “போகும் பாதையில் நல்லதொரு தேநீர் கடை இருக்கிறது. அங்கே வேண்டுமானால் எதையாவது வேண்டிச் சாப்பிடலாம். தேநீர் குடிக்கலாம்” என்று சுவாமி கூறினார்.

எனக்கு தலை சுற்றியது. அப்போது ஒரு மாதம் முழுவதும் ஏதோ இரண்டொருவர் தவிர, வேறெவரும் அம்மலையில் ஏறி உச்சிக்குச் செல்வதில்லை. அந்த இடத்தில் யார் தேநீர் கடை வைத்திருப்பான்? என்ற எண்ணமே என்னிடம் உதித்தது.

வேறு வழியில்லாமல் நான் சுவாமியோடு மலையேறினேன். பாதி வழியில் ஓர் அதிச யக்காட்சி தென்பட்டது. பாண், ரொட்டி, பலகாரங்கள் இவை அனைத்தும் வைக்கப் பட்ட ஒரு தேநீர் கடை அங்கே இருந்தது. “பார்த்தாயா மகனே, வேண்டியதைச் சாப்பிட்டுவிட்டு மேலே போகலாம்” என்றார் சுவாமி.

இருவரும் அந்தக் கடையில் உணவுண்டு, தேநீர் அருந்தி விட்டு மேலே சென்றோம்.


பின்னர் கீழிறங்கி வரும்போதுகூட அக்கடையில் உணவருந்தி, தேநீர் அருந்திய பின்னர் கீழே வந்துவிட்டோம், இதுவரை காலமும் இல்லாத தேநீர் கடை அங்கே எப்படி வந்திருக்கும்? அவ்வளவு பலகாரங் கள் அங்கிருந்தும் எம்மைத்தவிர வேறெ வரும் அங்கிருக்கவில்லை. அக்கடைக் காரன் யாரை நம்பி இவ்வளவு பலகாரங் களையும் கடையையும் வைத்திருப்பான் என்ற எண் ணம் மனதைக் குடைந்து கொண்டிருந்தது. அச்சமயம் யோகர் சிரித்தவாறே, “மகனே, உனது இடியப்பத்தையும் சொதியையும் சுமந்து வரவேண்டிய தேவை இருக்கவில்லை பார்த்தாயா?” என்று கூறினார்.

சுவாமியை யாழ்ப்பாணம் கொண்டு போய் விட்டபின்னர், மீண்டும் கொழும்பு திரும்பிய எனக்கு மனதில் அமைதி ஏற்பட வில்லை. இரண்டு நாட்கள் கழித்து நண்ப ரொருவரை அழைத்துக்கொண்டு சிவ னொளி பாதமலைக்கு சுவாமியோடு சென்ற வழியே போனேன். அத் தேநீர் கடை இருந்த இடத்தை நன்கு தெரிந்து வைத்திருந்தேன். ஆனால், அப்படி ஒரு கடை அவ்விடத்திலி ருந்த சுவடுகூடத் தெரியவில்லை. நான் சுற்று முற்றும் பார்த்த பின்னர் இந்த இடத்தில் ஒரு தேநீர் கடை இருந்த விடயத்தை நண்பரிடம் கூறினேன். அப்போது அந்த நண்பர் சிரித்து விட்டு, “உனக்குப் பைத்தியம். இந்த இடத் தில் தேநீர் கடையா?” என்று என்னிடம் கேட்டதோடு, எந்த மடையன் இந்த இடத்தில் தேநீர் கடை நடத்துவான்?” என்று பதிலளித்தார்.

ஆனால், எனக்கு ஏற்பட்ட அந்த அதிச யத்தை நான் அவரிடம் கூறி, விதண்டாவா தத்தில் ஈடுபட விரும்பவில்லை. அருளாளர்க ளுடைய அற்புதங்களை நேரில் கண்டறிந்து, அவர்களின் ஆசிகளைப் பெற்ற பின்னர் “நம்பினார் கெடுவதில்லை” என்ற திருப்தி யோடு இருப்பதே மேலாகும் என்ற எண்ணத் தோடு இருந்து விட்டேன்.

**தொகுப்பு: அனந்த பாலகிட்ணர்**
(நாளை தொடரும்)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓகஸ்ட் - 26 திங்கட்கிழமை
குரோதி வருடம் - ஆவணி 10
நல்ல நேரம் : 10.35 - 04.35
ராகு காலம் : 12.05 - 01.35
திதி : ஸப்தமி




**மேடம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் மற்றவர்களை நம்பி முடிவுகளை எடுக்க வேண்டாம். குடும்பத்தில் எதிர்பாராத செலவுகள் வந்து போகும். தானுண்டு தன் வேலையுண்டு என்றிருக்க வேண்டிய நாள்.

**இடபம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். திட்டமிடாத செலவுகளை போராடி சமாளிப்பீர்கள். உறவினர், நண்பர்கள் நன்றி மறந்து பேசுவார்கள். அலைச்சலுடன் ஆதாயம் தரும் நாள்.

**மிதுனம்**
எந்த பிரச்னையையும் சமாளிக்கும் மனப்பக்குவம் கிடைக்கும். சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். அரசாங்க விஷயம் நல்ல விதத்தில் முடியும். சிறப்பான நாள்.

**கடகம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உறவினர், நண்பர்களுடன் மனம் விட்டு பேசுவீர்கள். மற்றவர்களுக்காக சில செலவுகளை செய்து பெருமைப்படுவீர்கள். பணவரவு திருப்தி தரும். மதிப்புக்கூடும் நாள்.

**சிம்மம்**
கணவன் - மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**கன்னி**
சந்திராஷ்டமம் இருப்பதால் வேலைச்சுமை இருந்துக் கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். சிலர் உங்களிடம் நயமாகப் பேசினாலும் சொந்த திட்டமிட்டு செயல்பட வேண்டிய நாள்.

**துலாம்**
கடினமான காரியங்களை எளிதாக முடிப்பீர்கள். கல்யாணப் பேச்சு வார்த்தை சாதகமாக முடியும். சகோதரர் வகையில் ஒற்றுமை பிறக்கும். திறமைகள் வெளிப்படும் நாள்.

**விருட்சிகம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர், நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் உதவுவார்கள். அமோகமான நாள்.

**தனுசு**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களில் உண்மையானவர்களை கண்டறிவீர்கள். கனவு நனவாகும் நாள்.

**மகரம்**
எதிர்ப்புகளையும் தாண்டி முன்னேறுவீர்கள். தாயாருக்கு மருத்துவச் செலவுகள் வந்து போகும். வர வேண் டிய பணத்தை போராடி வசூலிப்பீர்கள். உழைப்பால் உயரும் நாள்.


**கும்பம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக்கொள்வீர்கள். தைரியம் கூடும் நாள்.

**மீனம்**
இதுவரை இருந்த சோர்வு களைப்பு யாவும் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். குடும்பத்தில் குதூகலமான சூழல் உருவாகும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். மகிழ்ச்சியான நாள்.

# பல்லாயிரம் பேர் திரண்ட முத்தமிழ் முருகன் மாநாடு

பழநி, ஓக. 26

இந்து சமய அறநிலையத் துறை சார்பில் தமிழ்க் கடவுளான முருகப் பெருமானின் பெருமையை உலகம் முழுவதும் உள்ள பக்தர்கள் அறிந்து கொள்ளும் வகையில், பழநியில் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு நேற்று முன்தினம் தொடங்கியது. இதில் வெளிநாட்டினர் உட்பட பல்லாயிரம் பேர் திரண்டனர்.



இந்த மாநாட்டில் கலந்து கொண்ட நீதிபதி வி. சிவஞானம் கூறுகையில், "அவன் இன்றி நாம் எதுவும் செய்ய முடியாது என்பதை உணர்த்துவதன் பயன்தான் இந்த முருகன் மாநாடு. இறைவனை எப்படி எல்லாம் பாடுவோம் என்று நம்முடைய முன்னோர்களும், அறிஞர்களும் பாடிக்காட்டி இருக்கிறார்கள்"- என்றார்.

நீதிபதி ஆர். சுப்பிரமணியன் தெரிவிக்கையில், "தமிழ் அறிஞர்கள் மற்றும் இந்து சமய அறநிலையத்துறையினர் அனைவரையும் ஒன்றிணைத்து இந்த மாநாட்டை நடத்துவது தமிழக அரசுக்கு பெருமை சேர்க்கும் வகையில் அமைந்துள்ளது" - என்றார். (எ)

# விஜயுடனான சந்திப்பு கூட்டணிக்காக இல்லை

## பிரேமலதா விஜயகாந்த் விளக்கம்



சென்னை, ஓக. 26

தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர், நடிகர் விஜய்யுடனான சந்திப்பு கூட்டணிக்கானது அல்ல. நட்புணர்வோடு நடைபெற்ற ஒன்று - இவ்வாறு தே. மு. தி. க. பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்தார்.

சென்னை கோயம்பேட்டில் உள்ள தே. மு. தி. க. அலுவலகத்தில் நடந்த செய்தியாளர்கள் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

விஜய் எங்களுக்கு புதியவர் கிடையாது. தனது கட்சியின் கொடி அறிமுகத்துக்கு முன்பாக எங்களது வீட்டுக்கு வந்து, மறைந்த தலைவர் விஜயகாந்தின் படத்துக்கு மரியாதை செலுத்தி, ஆசீர்வாதம் வாங்கிச் சென்றார். அவருக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகள்.

விஜய் புத்திசாலி, நிச்சயமாக பிரச்னைகளை எல்லாம் சமாளிப்பார். அதேபோல விஜய் திரை உலகில் நிறைய சவால்களை சந்தித்து இருக்கிறார். ஆனால், அரசியலை சினிமா போன்று எடுத்துக் கொள்ள முடியாது. அவர் எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடியையும் யோசித்து தான் எடுத்து வைக்க வேண்டும். இது ஒரு குடும்ப சந்திப்பு போன்று தான் எங்களுக்கு அமைந்தது - என்றார். (எ)

# மத நம்பிக்கைக்கு தி. மு. க. தடையாக இருந்தது இல்லை

## முருகன் மாநாடு குறித்து முதல்வர்

சென்னை, ஓக. 26

மத நம்பிக்கைகளுக்கு தி. மு. க. அரசு எப்போதும் தடையாக இருந்தது இல்லை என்று தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் தெரிவித்தார்.

இந்து சமய அறநிலையத் துறை சார்பில் பழநியில் நடைபெறும் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டை காணொலி வாயிலாக தொடங்கி வைத்து உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

இந்து சமய அறநிலையத் துறை சார்பில் 'அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு' மிகச் சிறப்பாக ஏற்பாடு செய் [illegible] என்னுடைய வாழ்த்துகள். பழநி, திருத்தணி, திருச்செந்தூர், மருதமலை, குமாரவயலூர், சிறுவாபுரி, காந்தல் ஆகிய 7 முருகன் திருக்கோவில்களில் பெருந்திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஏதோ திடீர் என்று பழநியில் மாநாடு நடத்தவில்லை. இப்படிப்பட்ட பணிகளை எல்லாம் செய்து கொண்டுதான் பழநியில் இந்த மாநாட்டை இந்து சமய அறநிலையத்துறை நடத்துகிறது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான நம்பிக்கைகள் இருக்கும். அதில் உயர்வு தாழ்வு இல்லை. அந்த நம்பிக்கைகளுக்கு இந்த அரசு எப்போதும் தடையாக இருந்தது இல்லை.


தி. மு. கவின் தாய் அமைப்பான நீதிக்கட்சி ஆட்சிக் காலத்தில்தான் பழுத்த ஆத்திகரான அன்றைய முதல்வர் பனகல் அரசரால் இந்து சமய அறநிலையப் பாதுகாப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. பண்பாட்டுச் சின்னங்களான கோவில்கள் முறையாக பாதுகாக்கப்பட வேண்டும். முறையாக செயல்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் அந்த சட்டம் கொண்டு வரப்பட்டது. இன்று சீரோடும், சிறப்போடும் கோவில்கள் இயங்க அடித்தளம் அமைத்தது அந்த சட்டம்தான்.

ஆலய வழிபாடுகளில் தமிழ் மொழி முதன்மை பெற வேண்டும். கோவில் கருவறைக்குள் மனிதருக்கிடையே பாகுபாடு காட்டாத சமத்துவம் நிலவ வேண்டும். அன்பால் உயிர்கள் ஒன்றாகும். அறத்தால் உலகம் நன்றாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமக்கு இடர்பாடுகள் இருந்தாலும் நாம் ஓரணியாக திரளவேண்டும்!

## நினைவுப் பேருரையில் வீரமணி



**யாழ்ப்பாணம், ஒக. 26**

**கடந்த காலத்தில் பல இரத்தக்கறைகள் உள்ளன. அவற்றை நாம் கண்ணீர் விட்டு அழித்துவிடமுடியாது. மீண்டும் நாம் வாழ்வதற்கு இத்தனை இடர்பாடுகள் எமக்குள் இருந்தாலும் நாம் ஓரணியாக ஒன்று திரள வேண்டும் இவ்வாறு தமிழ்நாட்டின் மூத்த அரசியல்வாதியும் திராவிடர் கழகத்தின் தலைவர் கி. வீரமணி தெரிவித்தார்.**

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அ.அமிர்தலிங்கத்தின் 97ஆவது பிறந்தநாள் நினைவு பேருரை நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. இதில், கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தனது உரையில்,

நாம் இன்னும் உரிமைகளைப் பெறவில்லை. நாம் இலட்சக்கணக்கில் ஆயிரக்கணக்கில் மிகப் பெரிய இழப்புகளை பெற்றுள்ளோம். நாம் சிந்திக்கிறபோது அனைவரும் ஒற்றுமையாக சிந்திக்க வேண்டும்.

அமிர்தலிங்கம் மிகப் பெரும் ஆளுமை உள்ள மனிதர். எனவே, அவர் பல்வேறு வழிமுறைகளில் தமிழ் மக்களுக்கும் தமிழ் அரசியல் தலைவர்களுக்கும் தனது கருத்துகளை விட்டுச் சென்றார்.

அவரைப் பற்றி சிந்திக்கின்றபோது இங்கே உள்ள புகைப்படம் ஞாபகம் வருகிறது. தந்தை செல்வா தொடங்கி எவ்வுலகில் இருந்தாலும் இந்த ஊரில் இருந்தாலும் மக்களுடைய பிரச்னைகளை நாம் படிக்கட்டாக மாற்றி, மறக்கப்பட்ட இனத்தை மீண்டும் விழிப்புணர்வுடன் கொண்டு செல்வதற்கு அனைவரும் ஓரணியாக திகழ வேண்டும் - என்றார்.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன், முன்னாள் பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன், எம்.கே சிவாஜிலிங்கம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (ஐ)

# 7 இலட்சம் ரூபாய்க்கு ஏலம்போன மாம்பழம்!

வடமராட்சி, ஒக. 26

நாகர்கோவில் முருகன் ஆலயத்தில் மாம்பழம் ஒன்று 7 இலட்சம் ரூபாய்க்கு ஏலத்தில் விலை போயுள்ளது.

வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் முருகன் ஆலயத்தில் ஏழாம் திருவிழாவான நேற்று முன்தினம் மாம்பழத் திருவிழா நடைபெற்றது.

இதில், முருகப்பெருமானுக்கு படைக்கப்பட்ட மாங்கனி ஏலம் விடப்பட்டது. இதன்போதே, அந்த மாம்பழம் 7 இலட் சம் ரூபாய்க்கு விற்பனையானது. (ஐ-02)

# ஓட்டோ தடம்புரண்டு 2 வயது குழந்தை பலி!

## சுன்னாகத்தில் பரிதாபம்

யாழ்ப்பாணம், ஒக. 26

முச்சக்கரவண்டி தடம் புரண்ட விபத்தில் 2 வயது ஆண் குழந்தை ஒன்று உயிரிழந்தது.

சுன்னாகத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

சுன்னாகத்திலிருந்து மருதனார்மடத்துக்கு குழந்தையும் தாயும் வாடகைக்கு அமர்த்திய முச்சக்கர வண்டியில் சென்ற போதே இந்த விபத்து நேர்ந்துள்ளது.

விபத்தில் தாயும் மகனும் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். எனினும், குழந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தது. (ஐ)



## வவுனியாவிலிருந்து நல்லூருக்கு பாத யாத்திரை நேற்று ஆரம்பம்!

வவுனியா, ஒக. 26

வவுனியா வேப்பங்குளம் பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் இருந்து நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு வேல் தாங்கிய பாத யாத்திரை நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமானது.

வவுனியா பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் விசேட வழிபாடுகள் நடைபெற்ற பின்னர் முருகப்பெருமானின் திருவுருவம் தாங்கிய ஊர்தியோடு வேல் தாங்கி பாதயாத்திரை ஆரம்பமானது.

நேற்று ஆரம்பித்த இந்த பாதை யாத்திரையானது 8 நாட்கள் ஏ - 9 வீதி ஊடாக சென்று அனைத்து கோயில்களையும் தரிசித்து நல்லூர் தேர்த் திருவிழாவான எதிர் வரும் செப். முதலாம் திகதி நல்லூர் கோவிலை சென்றடையும். (ஐ)

## மன்னார் சிந்துஜாவின் கணவரும் உயிரிழப்பு

கொழும்பு, ஒக. 26

மன்னார் மருத்துவமனையில் மருத்துவர்களின் அலட்சியத்தால் உயிரிழந்த இளம் தாய் சிந்துஜாவின் கணவரும் உயிரிழந்தார்.

எஸ். சுதன் (வயது 26) வவுனியா பனிக்கர் புளியங்குளத்தில் உள்ள இல்லத்தில் உயிரிழந்தார்.

முன்னதாக, மன்னார் பொது மருத்துவமனையில் அண்மையில் இளம் தாய் ஒருவர் குழந்தை பெற்ற நிலையில் சில நாட்களின் பின்னர் இரத்த போக்கால் மீண்டும் மன்னார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு, மருத்துவர்களால் கவனிக்கப்படாத நிலையில் சிந்துஜா உயிரிழந்தார்.

இந்த நிலையிலேயே நேற்று முன்தினம் அவர் தவறான முடிவு எடுத்து உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# பொதுமகனை தாக்கிய பொலிஸ் உத்தியோகத்தர் கைதானார்!

யாழ்ப்பாணம், ஒக. 26

மதுபோதையில் கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் பொதுமகனை தாக்கிய குற்றத்துக்காக கைது செய்யப்பட்டுள்ளார்.

குறிகாட்டுவான் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

மதுபோதையில் குறிகாட்டுவான் பகுதியில் கடமையில் இருந்த குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் வீதியால் சென்ற பொதுமகனை மறித்துள்ளார். இதன்போது, ஏற்பட்ட முரண்பாட்டில் பொலிஸ் உத்தியோகத்தர் பொதுமகனை தாக்கியுள்ளார்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட பொதுமகன் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

இதனடிப்படையில் தாக்குதலை நடத்திய பொலிஸ் உத்தியோகத்தர் கைதுசெய்யப்பட்டார்.

கைதான பொலிஸ் உத்தியோகத்தரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# தமிழ் மக்களுக்கு காலம் இட்ட கட்டளையே பொதுவேட்பாளர்

## பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஒக. 26

முள்ளிவாய்க்கால் யுத்தத்தின் முடிவு வரைக்கும் தமிழ்த் தேசிய உணர்வோடு தேசமாகத் திரண்டிருந்த தமிழ் மக்கள் யுத்தத்தின் பின்னர் சிதறடிக்கப்பட்டார்கள். அரசின் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலில் பிரதேசம், சாதியம், சமயமாக தமிழ்த் தேசியம் துண்டாடப்பட்டு வருகிறது. இவற்றால் அரசியல் ரீதியாகத் தமிழினம் மிகவும் பலவீனமாக பின்தள்ளப்பட்டுள்ளது. இதனைக் கருத்தில்கொண்டே தமிழ் மக்களைத் தேசமாக மீண்டும் திரளச் செய்து அரசியல் அபிலாசைகளை ஒரே குரலில் வெளிப்படுத்தும் நோக்குடன் ஜனாதிபதித் தேர்தலில் தமிழப் பொதுவேட்பாளர் நிறுத்தப்பட்டுள்ளார். இந்த முடிவு காலம் இட்ட கட்டளை என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்ப் பொது வேட்பாளர் அரியநேத்திரனை ஆதரித்து கூட்டுறவு அமைப்புகளின் பிரதானிகளுடனான சந்திப்பு நல்லூர் திவ்ய ஜீவன மண்டபத்தில் நடைபெற்றது. இதற்கு தலைமை வகித்து உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்துவது என்பது தமிழ்த் தேசிய அரசியலில் ஒரு கோட்பாட்டு ரீதியான முடிவு. இதனை புரிந்து கொள்ள விரும்பாதவர்கள் வெல்ல முடியாத தேர்தலில் எதற்காகப் போட்டி என்று விதண்டாவாதம் புரிகிறார்கள். எண்ணிக்கையில் மிகப் பெரும்பான்மையாகச் சிங்கள மக்களைக் கொண்ட இலங்கைத் தீவில் தமிழன் ஒருபோதும் ஜனாதிபதியாக வர முடியாது என்பது எல்லோருக்கும் தெரியும். பொதுவேட்பாளர் ஜனாதிபதியாக வெற்றிபெற முடியாது. ஆனால், தமிழ் மக்களை மீளவும் தேசமாகத் திரளச் செய்வதில் அவர் வெற்றி பெறுவார்.

தென்னிலங்கை வேட்பாளர்களிடையே நான்கு முனைப் போட்டி நிகழும் நிலையில் பொதுவேட்பாளர் தங்களின் வெற்றி வாய்ப்பைப் பாதிக்கும் என்று அவர்கள் அஞ்சுகிறார்கள். இதனால் பொதுவேட்பாளரை நிறுத்தியுள்ள தரப்புகளுடன் பேச வருமாறு அழைப்புக்கு மேல் அழைப்பு விடுக்கிறார்கள். அதே சமயம் அவர்களுடன் நேரடியாகவும், பின்கதவாலும் தொடர்புகளை பேணிவருகின்ற தமிழ் அரசியல்வாதிகளின் மூலம் பொதுவேட்பாளருக்கு எதிரான மூர்க்கத்தனமான கருத்துகளும் பரப்பப்பட்டு வருகின்றன. பொதுவேட்பாளர் துரோகியாகக்கூட சித்திரிக்கப்படுகிறார்.

பொதுவேட்பாளர் பற்றித் தென்னிலங்கை வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தைப் பார்த்த பின்பே



முடிவெடுக்கலாம் என்றும் அவர்களுடன் பேரம் பேசலாம் எனவும் தமிழ் அரசியல்வாதிகள் சிலர் கூறிவருகின்றார்கள். தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்னைக்கான குறைந்தபட்சத் தீர்வையேனும் ஆட்சி அதிகாரங்களில் இருந்த போது கூடச் செய்ய விரும்பாத தென்னிலங்கைத் தலைமைகளுடன் தேர்தல் நேரத்தில் பேச முற்படுவது அவர்களின் வெற்றிவாய்ப்பை உறுதி செய்வதற்கான ஓர் உத்தியே ஆகும். பொதுவேட்பாளருக்கு எதிரான பரப்புரைகளின் பின்னால் உள்ள கபடத்தனங்களை தமிழ் மக்கள் புரிந்து கொள்ளவேண்டும் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பண்டாரவன்னிய மன்னனின் 221ஆவது நினைவேந்தல்!

வவுனியா, ஒக. 26

வன்னி இராச்சியத்தின் இறுதி மன்னன் பண்டாரவன்னியனின் 221ஆவது நினைவு தினம் நேற்று ஞாயிற்றுக்கிழமை கடைப்பிடிக்கப்பட்டது.

வவுனியா நகர சபை மற்றும் பண்டாரவன்னியன் விழாக்குழு ஏற்பாட்டில் வவுனியா நகர சபை செயலாளர் அ. பாலகிருபன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

விருந்தினர்கள் வரவேற்புடன் கொடியேற்றப்பட்டது. இதன் போது, கொடிக்கீதத்தை வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி மாணவிகள் பாடினர். மங்கள விளக்கேற்றலுடன் பண்டாரவன்னியனின் சிலைக்கு மலர் மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மாவட்ட அரசாங்க அதிபர் பி. ஏ. சரத்சந்திர, சிறப்பு விருந்தினர்களாக வவுனியா பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தெ. ரதீஸ்வரன் பங்கேற்றனர். இந்த நிகழ்வில் பலர் பங்கேற்றனர். (ஐ)

# உள்ளூராட்சி தேர்தலை நடத்துவதற்கு தேவையான பணம் தற்போது இல்லை!

## தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர்



கொழும்பு, ஒக. 26

**உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு தேவையான பணம் தற்போது இல்லை என்று தேர்தல் ஆணைக்குழு தலைவர் ஆர்.எம்.எல்.ஏ.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான அடிப்படை செலவுகள் தவிர ஏனைய செலவுகள் குறித்து திறைசேரி பரிசீலித்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்காக வேட்புமனு தாக்கல் செய்த சில வேட்பாளர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். மேலும் சில வேட்பாளர்கள் இறந்துவிட்டனர் என்றும் அவர் கூறினார்.

இந்நிலையில், உள்ளூராட்சி மன்ற தேர்தல் குறித்து சிறப்பு கலந்துரையாடல் ஒன்றை அடுத்த வாரம் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ)

## சகோதரியை வன்புணர முயன்ற சிறுவன் சீர்திருத்தப் பள்ளியில்!

நுவரெலியா, ஒக. 26

தனது ஒன்றுவிட்ட 11 வயது சிறுமியை வன்புணர முயன்ற 14 வயது சிறுவன் நீதிமன்ற உத்தரவின்பேரில் சீர்திருத்தப் பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நுவரெலியாவின் மஸ்கெலியா பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, சீர்திருத்தப்பள்ளியில் சேர்க்கப்பட்ட சிறுவன் பெரிய தந்தையின் வீட்டில் தங்கியிருந்துள்ளார். இந்நிலையில், 11 வயது சிறுமியான தனது ஒன்றுவிட்ட தங்கையை வன்புணர முயன்றுள்ளார். ஆனால், அந்த சமயம் அவரின் பெரியதந்தை வீட்டுக்கு வந்துள்ளார். இதையடுத்து, அவர் அளித்த முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸார் சிறுவனை கைது செய்தனர்.

நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட சிறுவனை எதிர்வரும் 4ஆம் திகதி வரை சிறுவர் சீர்திருத்தப் பாடசாலையில் சேர்க்க நீதிவான் உத்தரவிட்டார்.

பாதிக்கப்பட்ட சிறுமி டிக்கோயா கிளங்கன் ஆதார மருத்துவமனையில் பரிசோதனைக்காக சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ)

## ஹெரோயினுடன் மூவர் கைதாகினர்!

கொழும்பு, ஒக. 26

ஹெரோயின் போதைப் பொருளுடன் வெவ்வேறு இடங்களில் மூவர் கைது செய்யப்பட்டனர்.

மேல் மாகாணத்தில் நடத்தப்பட்ட விசேட நடவடிக்கையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கம்பஹா ஜா எலவில் 12 கிராம் 340 மில்லி கிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைதானார். சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இதேபோல, கொழும்பு - கல்கிசையில் ஒருவர் கைது செய்யப்பட்டார். 38 வயதான இரத்மலானை பிரதேசத்தை சேர்ந்த நபரே கைதானார். அவரிடமிருந்து 5.2 கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டது.

கலகிசையில் வேறு ஒரிடத்தில் 6.1 கிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார். கைதானவர் 28 வயது நபராவார். (ஐ)

## ரணிலுக்கான பிரசார பணியை 30இல் ஆரம்பிக்கும் இ.தொ.கா.!

கொழும்பு, ஒக. 26

ஜனாதிபதித் தேர்தலுக்கான இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரசாரம் எதிர்வரும் 30ஆம் திகதி ஆரம்பமாகும் என்று பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் 21ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதனையொட்டி தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்விற்கு ஆதரவு வழங்க கடந்த18ஆம் திகதி இ. தொ. காவின் தேசிய சபை தீர்மானித்துள்ளது. இதனை தொடர்ந்து எதிர்வரும் 28ஆம் திகதி இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை, கொழும்பு சுகததாச அரங்கில் கைச்சாத்திடப்படவுள்ளது.

இதைத் தொடர்ந்து பிரசாரப் பணிகள் எதிர்வரும் 30ஆம் திகதி ஆரம்பமாகும் என்றும் கூறினார். (ஐ)

## காலமான வேட்பாளருக்கு பதில் வேறொருவரை நிறுத்த முடியும்!

### தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

கொழும்பு, ஒக. 26

ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராக போட்டியிடவிருந்த நிலையில் மரணித்த ஹைதுருஸ் முஹமட் இலியாஸுக்கு பதிலாக வேறொரு வேட்பாளரை முன்னிறுத்த சந்தர்ப்பம் உள்ளதென தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.


ஹைதுருஸ் முஹமட் இலியாஸின் மரண சான்றிதழை சமர்ப்பிப்பதன் மூலம் இலியாஸ் சார்பில் வேறொரு வேட்பாளரை பரிந்துரைக்க முடியும் என ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்க கூறியுள்ளார்.

இதற்கு 3 நாட்கள் கால அவகாசம் வழங்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார். எவ்வாறாயினும், வாக்குச் சீட்டில், முஹமட் இலியாஸின் வாக்காளர் சின்னமும் பெயரும் அச்சிடப்பட்டுள்ளதால் அவற்றில் மாற்றங்கள் எதுவும் செய்யப்படாது என்றும் அவர் கூறினார்.

ஜனாதிபதித் தேர்தலில் இம்முறை சுயாதீன வேட்பாளராக போட்டியிட வேட்பு மனு தாக்கல் செய்திருந்த புத்தளத்தைச் சேர்ந்த ஹைதுருஸ் முஹமட் இலியாஸ் கடந்த வியாழக்கிழமை காலமானார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தகுதியானவர்களுக்கே எமது ஆட்சியில் பதவி!

## இரத்தினபுரியில் அநுரகுமார



கொழும்பு, ஒக. 26

தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தின் கீழ், வேலைக்கு தகுதியானவர்களுக்கு மாத்திரமே பதவிகளை வழங்குவோம். அரசியல் தொடர்புகள் அல்லது குடும்ப உறவுகளை நாங்கள் கருத்தில் கொள்ள மாட்டோம் - தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரி - பலாங்கொடையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர்,

"நாடு முற்றிலும் சிதைந்துவிட்டது. ஆனால், செப்ரெம்பர் 21 ஆம் திகதிக்குப் பின்னர் இந்த நாட்டை படிப்படியாக அபிவிருத்தி செய்யத் தொடங்குவோம் என்று நாங்கள் உத்தரவாதம் அளிக்கிறோம்"

நாங்கள் அதை எப்படி செய்வது? முதலில், அரசியல் வாதிக்கும் குடிமகனுக்கும் இடையிலான தொடர்பு வலுப்படுத்தப்பட வேண்டும். முதலில் எங்களுக்கு ஆதரவாக வாக்களிக்காத வாக்காளர்களின் நம்பிக்கையைப் பெறுவதற்கு அரசியல் சீர்திருத்தத்தை ஏற்படுத்துவோம். அதற்கு முன்னுதாரணமாக இருப்போம்.

நீண்ட காலமாக குடும்பங்கள், உறவுகள் மற்றும் நண்பர்கள் மீது கட்டமைக்கப்பட்ட அரசாங்கங்களால் நாங்கள் ஆளப்பட்டோம். இருப்பினும், தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தின் கீழ், வேலைக்கு தகுதியானவர்களுக்கு மாத்திரமே பதவிகளை வழங்குவோம். அரசியல் தொடர்புகள் அல்லது குடும்ப உறவுகளை நாங்கள் கருத்தில் கொள்ள மாட்டோம்." என்று அவர் மேலும் கூறினார். (ஐ)

## அரச ஊழியரை 10 இலட்சமாக குறைப்பதற்கு நடவடிக்கை!

கொழும்பு, ஒக. 26

2030ஆம் ஆண்டுக்குள் அரச ஊழியர்களின் எண்ணிக்கையை 10 இலட்சம் அல்லது அதற்கும் குறைவாக மட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான பிரேரணை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவை தீர்மானங்கள் தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, 2025ஆம் ஆண்டு முதல் மூன்று ஆண்டுகளுக்குள், முழு அரச சேவையையும் டிஜிற்றல் மயமாக்கல் மற்றும் மின்னணு அமைப்புகள் மூலம் அரசாங்க கட்டுப்பாட்டுக்கான ஓர் அமைப்பை அறிமுகப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி, அரசின் செலவு சுமையைக் குறைப்பதன் மூலம் செயல்திறனை அதிகரிக்க, பரிந்துரைக்கப்பட்ட முறைகளைப் பின்பற்றி சேவையைப் பெறவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, அடையாளம் காணப்பட்ட அரசதுறைகள், சட்டபூர்வ அமைப்புகள், பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ள பொது வரையறுக்கப்பட்ட நிறுவனங்களாக மாற்றவும், அரச ஊழியர்களின் சேவைகள் குறித்து முறையான ஆய்வு மற்றும் அறிவியல் மறுசீரமைப்பு திட்டத்தை செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேட்பாளர்களின் சொத்து விவரங்கள் வெளியாகின!

- ரணிலுக்கு ரூ. 18.5 இலட்சம் கடன் உள்ளதாம்
- ரூ. 30 இலட்சம் நாமலுக்கு வட்டியாக கிடைக்கிறதாம்
- சஜித்திடம் 5 வாகனங்கள் உள்ளனவாம்

கொழும்பு, ஒக. 26

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் சொத்து விபரங்கள் கையூட்டல் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் வெளியிடப்பட்டுள்ளது.**

**வேட்பாளர்கள் சமர்ப்பித்த ஆவணங்களின் பிரகாரம் இந்த விவரம் வெளியிடப்பட்டுள்ளது.**

இதன்படி,

தற்போதைய ஜனாதிபதியும் சுயேச்சையாக போட்டியிடும் வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்கவின் மாத வேதனம் 97 ஆயிரத்து 500 ரூபாயாகும். அத்துடன், அவர் 82 ஆயிரத்து 191 ரூபாய் 66 சதம் வேறு கொடுப்பனவுகளை பெறுகிறார்.

களனி பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக பணிபுரியும் அவரின் மனைவியின் மாதாந்த வேதனம் 5 இலட்சத்து 76 ஆயிரத்து 785 ரூபாய் 50 சதமாகும்.

அத்துடன் அவர் இரத்தினங்கள் மற்றும் ஆபரணத் துறையில் பணத்தை முதலீடு செய்துள்ளதுடன், அவரிடம் உள்ள ஆபரணங்களின் பெறுமதி 6 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாயாகும்.

இதேநேரம், ஜனாதிபதியின் மனைவி, அவரின் தாயிடமிருந்து பெற்ற 39 இலட்சம் ரூபாய் பெறுமதியான பல நகைகளை வைத்துள்ளார்.

குருநாகல் - மல்பொக்குனாவத்தையில் உள்ள காணி, கொழும்பு - 7இல் தற்போது அவர் வசிக்கும் வீடு, நாவல வீதியில் உள்ள அவரது வீடு மற்றும் அதனுடன் தொடர்புடைய காணி அவரின் ரணிலின் சொத்துகளாகும்.

இதேநேரம், ஜனாதிபதியிடம் உள்ள ஜீப் ரக வாகனம் ஒன்றும் இரண்டு பென்ஸ் ரக கார்களும் உள்ளன. இதே நேரம், 18 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் கடனையும் அவர் வங்கிகளில் பெற்றுள்ளார் என்று கூறப்பட்டது.

இதேபோன்று, ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் மாத வருமானம் சகல கொடுப்பனவுகளுடன் 2 இலட்சத்து 95 ஆயிரத்து 681 ரூபா 14 சதமாகும்.

தனது மனைவியின் அழகுக்கலை நிலையத்துக்காக அவர் ஒரு கோடியே 37 இலட்சத்து 68 ஆயிரத்து 532 ரூபாய் 75 சதம் முதலீடு செய்துள்ளார். கொழும்பு - கஹம்பிலியவெடிய பகுதியில் காணி ஒன்றும் அவருக்கு உள்ளது. அத்துடன், 23 இலட்சம் பெறுமதியான நகைகள் மனைவியிடம் உள்ளன.

அத்துடன், பென்ஸ் கார் மற்றும் லாண்ட் குருஷர், ப்ராடோ ரக வாகனங்கள் உட்பட 5 வாகனங்களை அவர் வைத்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திஸநாயக்கவின் கொடுப்பனவுடன் கூடிய மாதாந்த வருமானம் இரண்டு இலட்சத்து இரண்டாயிரத்து 571 ரூபாய் 34 சதமாகும்.

அநுர குமார திஸாநாயக்கவின் மனைவி தொழில் எதனையும் புரியவில்லை. அவரிடம் சில தங்கநகைகள் உள்ளன. ஒரே ஒரு வாகனத்தை வைத்துள்ளார். அத்துடன், பத்தரமுல்லையில் அவர் வசிக்கும் வீடு அவருக்கு சொந்தமானது என்றும் தெரிவிக்கப்பட்டது.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடும் நாமல் ராஜபக்ஷவின் மாதாந்த வேதனம் 54 ஆயிரத்து 285 ரூபாவாகும். எனினும், அவர் 4 இலட்சம் ரூபாயை மாதாந்தம் ஈட்டுகிறார்.

அவரின் மனைவி மாதம் ஒரு இலட்சத்து 15 ஆயிரம் ரூபாயை வேதனமாக பெறுகிறார். அத்துடன், 20 கோடி ரூபாய் கடன் வழங்கியுள்ள நாமல் அவற்றின் மூலம் 30 இலட்சம் ரூபாயை மாதாந்தம் வட்டியாக பெறுகிறார்.

தன்னிடம் 88 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நகைகளும் மனைவியிடம் 13 கோடியே 80 இலட்சம் பெறுமதியான நகைகளும் உள்ளன.

அத்துடன் இரண்டு கார்கள், ஒரு பென்ஸ் ரக கார், ப்ராடோ ரக வாகனம் ஒன்றும் ஒரு டிபெண்டர் ரக வாகனம் ஆகியவை தனக்கு சொந்தமானவை என்று நாமல் ராஜபக்ஷ கூறியுள்ளார். (ஐ)

## பாடசாலைகள் இன்று ஆரம்பம்!



கொழும்பு, ஒக. 26

பாடசாலைகள் அனைத்தும் இன்று திங்கட்கிழமை மூன்றாம் தவணைக்காக ஆரம்பமாகிறது என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகள் அனைத்துப் பாடசாலைகளும் இன்று ஆரம்பமாகின்றன.

இரண்டாம் பாடசாலை தவணை கடந்த வெள்ளிக்கிழமை 16ஆம் திகதி முடிவடைந்ததுடன் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில், மூன்றாம் தவணை கற்றல் நடவடிக்கைகள் இன்று திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பெண் கொலை; இருவர் கைது!

கொழும்பு, ஒக. 26

பெண் ஒருவர் குத்திக் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

களுத்துறை - ஹொரணை - சிரில்டன்வத்தையில் நேற்று முன்தினம் 36 வயது பெண் ஒருவர் கொல்லப்பட்டார்.

உயிரிழந்த பெண்ணுக்கும் அயல் வீட்டில் வசிக்கும் நபருக்கும் இடையில் ஏற்பட்ட தனிப்பட்ட தகராறே கொலைக்குக் காரணம். அயலவரும் அவரின் சகோதரரும் இணைந்தே பெண்ணை கொலை செய்தனர் என்று கூறப்படுகின்றது. சந்தேகநபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஐ)

## தபால் ஊழியர்களின் விடுமுறைகள் இரத்து


கொழும்பு, ஒக. 26

ஜனாதிபதித் தேர்தல் நிறைவடையும் வரையில் சகல அஞ்சல் பணியாளர்களின் விடுமுறைகளும் உடன் அமுலாகும் வகையில் இரத்துச் செய்யப்பட்டுள்ளன என்று பிரதி அஞ்சல் மா அதிபர் ராஜித ரணசிங்க அறிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான செயல்பாடுகளை கருத்தில்கொண்டு அவர்களின் விடுமுறையை இரத்து செய்யத் தீர்மானிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேலும், அத்தியாவசிய காரணங்களுக்காக விடுமுறை எடுக்க வேண்டுமாயின் மாகாணத்துக்குப் பொறுப்பான பிரதி அஞ்சல்மா மா அதிபரின் அனுமதியைப் பெற வேண்டுமென பிரதி அஞ்சல்மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்துள்ளார். (ஐ)

## எரிபொருள் ரயில் தடம்புரண்டது!



கொழும்பு, ஒக. 26

மருதானை ரயில் நிலையத்தில் நேற்று காலை ரயில் ஒன்று தடம் புரண்டதால் ரயில் சேவைகள் தாமதமாகின.

எரிபொருள் ரயிலே தடம் புரண்டது. இதனால், ரயில் நடைமேடையும் கடுமையாக சேதமடைந்தது.

இதையடுத்து மருதானை வழியான ரயில் சேவைகள் தாமதமாகின. (ஐ)

## பொருளாதாரத்தை கட்டியெழுப்ப இன்னமும் 3 வருடங்கள் தேவை!

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க



கொழும்பு, ஒக. 26

நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு இன்னும் 3 வருடங்கள் தேவைப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தம்புள்ளையில் நடந்த மக்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், ஜே. வி. பியினர் ஆட்சிக்கு வந்தால் சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் மற்றும் வரிகளை இல்லாமல் செய்வதாகக் கூறுகின்றனர்.

எனக்கும் வரிகளை இல்லாமல் செய்வதற்கு விருப்பம் உள்ளது. எனினும், அவ்வாறு செய்தால் நாம் 2022ஆம் ஆண்டின் ஜூன் மாதத்துக்கே மீண்டும் சென்றுவிடுவோம்.

எனவே வேறு எவரிடமும் நாட்டை கையளிக்க வேண்டாம், அவ்வாறு செய்வதால் நாடு மீண்டும் நெருக்கடிக்கு உள்ளாகும். நாம் இருப்பதைப் பாதுகாத்து இன்னும் 3 வருடங்களில் அனைத்து பிரச்னைகளுக்கும் தீர்வுகண்டு முன்னோக்கிச் செல்ல முடியும் என்றார். (ஐ)



## 776 கிலோ பீடி இலை புத்தளத்தில் சிக்கின!

சிலாபம், ஒக. 26

புத்தளத்தில் நடத்தப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் 776 கிலோ பீடி இலைகள் கைப்பற்றப்பட்டன என்று கடற்படை தெரிவித்தது.

புத்தளம் - கற்பிட்டி - கப்பலடி கடற்கரை பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இந்த பீடி இலைகள் கைப்பற்றப்பட்டன.

சுற்றிவளைப்பின்போது 24 பொதிகள் கைப்பற்றப்பட்டன. அவற்றில் 776 கிலோ பீடி இலைகள் இருந்தன. கைப்பற்றப்பட்ட பீடி இலை பொதிகள் மேலதிக விசாரணைகளுக்காக தமது பாதுகாப்பில் உள்ளன என்று கடற்படை தெரிவித்துள்ளது. (ஐ)

## கத்தோலிக்க ஆயர் பேரவை ஜனாதிபதியுடன் சந்திப்பு!

கொழும்பு, ஒக. 26

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் தலைவர் அருட்தந்தை ஹரோல்ட் அந்தோனி பெரேராவும் சந்தித்து பேசியுள்ளனர்.

இந்த சந்திப்பின்போது கல்வி சீர்திருத்தங்கள், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணை, சுற்றுச்சூழல் மற்றும் தேவாலய விவகாரங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## ஜீப் வண்டி மோதியதில் இளம் தாய் உயிரிழப்பு!

### சிறுமி உட்பட இருவர் காயம்

கொழும்பு, ஒக. 26

மோட்டார் சைக்கிளை ஜீப் வண்டி மோதியதில் இளம் தாய் உயிரிழந்தார். 3 வயது சிறுமியும் அவரின் தந்தையும் படுகாயமடைந்தனர்.

களுத்துறை - ஹொரணை - பொரலுகொட பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றது.

இதில், மோட்டார் சைக்கிளில் பயணித்த 26 வயதான இளம் தாயே உயிரிழந்தார். அத்துடன், இவருடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த அவரின் உறவினர்களான 3 வயது சிறுமியும் சிறுமியின் தந்தையுமே படுகாயமடைந்தனர்.

ஜீப் வண்டியின் சாரதி ஹொரண பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஜித், அநுர தேர்தலில் போட்டியிட எந்த தார்மீக உரிமையும் இல்லை

## அமைச்சர் பந்துல சொல்கிறார்

மட்டக்களப்பு, ஓக. 26

**மட்டக்களப்பில் 75 சதவீத மேலதிக வாக்குகளால் ரணில் விக்கிரமசிங்க நிச்சயம் வெற்றி பெறுவார். ஜனநாயகத்தை பாதுகாக்கத் தவறிய சஜித்துக்கோ அநுரவுக்கோ ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட எந்த தார்மீக உரிமையும் கிடையாது என்று அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.**

மட்டக்களப்பில் சனிக்கிழமை நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தப் பிரதேசத்தில் 75 வீத மேலதிக வாக்குகளால் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெறுவார். ஐ. தே. க, மக்கள் ஐக்கிய முன்னணி, பொதுஜன பெரமுன உட்பட அனைத்து கட்சிகளையும் இணைத்து பொது வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க மாத்திரம் தான் போட்டியிடுகிறார். பிள்ளையானின் கட்சி, அதாவுல்லாவின் கட்சி உட்பட சிறுபான்மை கட்சிகள் இணைந்து பொது வேட்பாளருக்கு ஆதரவு வழங்குகின்றன. ரணில் விக்கிரமசிங்கவை வெல்ல வைப்பதற்காக அன்றி, தாய் நாட்டை மீளக் கட்டியெழுப்பும் திட்டத்தை வெல்ல வைப்பதற்காகவே மக்கள் வாக்களிக்கின்றனர்.

கடந்த காலத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் வீதியில் கொல்லப்பட்டனர். வீடுகள் எரிக்கப்பட்டன. இலங்கையை பங்களாதேஷாக மாற்ற முயன்றனர். ஜனநாயகத்தை பாதுகாக்கவும் மனித உயிர்களைக் காக்கவும் ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்தார்.

நாடு பின்னடைந்து சுற்றுலா பயணிகள் வருகை தராத நிலை காணப்பட்டது. வெளிநாடுகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு 420 ரூபாய்க்கு டொலரை பெற்று அனுப்பும் நிலை காணப்பட்டது. கடனை மீளச் செலுத்த முடியாமல் வங்குரோத்து நாடாக வெளிநாடுகள் அறிவித்தன. வங்குரோத்து நாடுகளின் கடன் பத்திரங்களை வெளிநாடுகள் ஏற்கவில்லை. அத்தியாவசியப் பொருட்களை வெளிநாடுகளில் இருந்து கொண்டுவர முடியாத நிலை ஏற்பட்டது. வாகன உதிரிப்பாகங்களை இறக்குமதி செய்ய முடியவில்லை.



சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தம் மேற்கொண்டு அதன் நிபந்தனைகளை ஏற்றிருக்காவிட்டால் ஆப்கானிஸ்தான், சிம்பாவே போன்ற நிலைக்கு இலங்கை சென்றிருக்கும். 2027 வரை அதே போன்றே ஒப்பந்தத்தை பாதுகாக்காவிட்டால் 2025 வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்க முடியாத நிலை ஏற்படும். அஸ்வெசும கொடுப்பனவு கிடைக்காது. அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க முடியாத நிலை ஏற்படும். ஓய்வூதியம் வழங்க முடியாது போகும். ரணில் விக்கிரமசிங்க ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத்தை விடுத்து செயல்பட்டால், எந்த வேட்பாளராலும் வரவு - செலவுத் திட்டத்தை முன்னெடுக்க முடியாது போகும்.

2025 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டம் தயாரிப்பதற்கு எவ்வளவு தொகை நிதி தேவை என சஜித்தால் கூற முடியுமா என சவால் விடுகிறேன். ஜனாதிபதி செய்து கொண்ட உடன்படிக்கையை மீறினால் ஒரு மாதத்திலே நாடு மீண்டும் வீழ்ச்சியடையும். அரச ஊழியர்களுக்கு 3 வருட காலத்துக்கு தொடர்ச்சியாக 25 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு வழங்கப்பட இருக்கிறது. சம்பள முரண்பாடு தீர்க்கப்பட்டு அடிப்படைச் சம்பளம் அதிகரிக்கப்பட உள்ளது - என்றார். (எ)



# ஆசிரியரை மேடையேற்றி புகழ்ந்த ஜனாதிபதி ரணில்

மட்டக்களப்பு, ஓக. 26

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கல்வி கற்ற போது 1970களில் கொழும்பு றோயல் கல்லூரியில் ஆசிரியராக கடமையாற்றிய ப. சிவலிங்கம், மட்டக்களப்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தின் மேடையில் ஏறி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்கு ஆசி வழங்கினார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் தலைவர், அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் சனிக்கிழமை ஏற்பாடு செய்திருந்த "இயலும் சிறீலங்கா" பொதுக் கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு ஜனாதிபதிக்கு ஆசி வழங்கினார்.

ஓய்வுபெற்ற பின்னர் மட்டக்களப்பில் உள்ள தனது வீட்டில் வசித்து வரும் 98 வயதான பி. சிவலிங்கம் தனது மாணவர்களில் ஒருவரான ரணில் விக்கிரமசிங்க மட்டக்களப்புக்கு வருவதை அறிந்து இந்தப் பேரணிக்கு வந்திருந்தார். தனது ஆசிரியரை அருகில் உட்கார வைத்த அவரது பழைய மாணவனான ரணில் விக்கிரமசிங்க, கூட்டத்தில் உரையாற்றிய போதும் அவரைப் புகழ்ந்தார்.

"எந்தவொரு அச்சமான சூழ்நிலையிலும் கஷ்டப்படும் மக்களை கைவிட்டு ஓடிப் போய் எமது நகரத்துக்கு அவப்பெயரை ஏற்படுத்த மாட்டேன்" என்று எதென்ஸ் சாம்ராஜ்ஜியத்தின் இளையோர் செய்துகொண்ட சத்தியப்பிரமாணத்தை றோயல் கல்லூரியில் தான் கற்றுக்கொண்டதனால் 2022ஆம் ஆண்டு எவரும் ஏற்றுக்கொள்ள அஞ்சிய நாட்டைப் பொறுப்பேற்று பொருளாதாரத்தை முன்னேற்றும் சவாலை வெற்றிகொண்டிருப்பதாக தெரிவித்த ஜனாதிபதி ரணில், தனது வெற்றியில் ஆசிரியர் சிவலிங்கத்துக்கும் பங்கிருப்பதாகத் தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு மாத்திரமின்றி பிரதமர் தினேஷ் குணவர்த்தன, முன்னாள் சபாநாயகர் அநுர பண்டாரநாயக்க, மலிக் சமரவிக்கிரம உள்ளிட்ட பல முக்கியத்தர்களுக்கு ஆசிரியர் சிவலிங்கம் கற்பித்திருப்பதாகவும், அவர் கற்றுக்கொடுத்தவை வீண் போகவில்லை என்பதை நேரில் காண்பதாகவும் ஜனாதிபதி தனது உரையில் சுட்டிக்காட்டியமை குறிப்பிடத்தக்கது. (எ)

# ரணிலை ஆதரிக்கும் முபீன் இடைநிறுத்தம்

கல்முனை, ஓக. 26

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கும் சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உயர் பீட உறுப்பினரும் கட்சியின் தேசிய கொள்கை பரப்புச் செயலாளருமான யூ. எல். எம். என். முபீன் கட்சியின் உறுப்புரிமையில் இருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார் என்று கட்சியின் செயலாளர் நிஸாம் காரியப்பர் அறிவித்துள்ளார்.

அத்துடன் அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கான விளக்கம் கோரும் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் செயலாளர் தெரிவித்தார்.

எமது முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தீர்மானத்தை மீறி ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பகிரங்கமாக ஆதரிப்பதால், தலைவர் ரவூப் ஹக்கீமின் அறிவுறுத்தலின் பேரில் கட்சியில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ள முபீன் ஒரு வார காலத்துக்குள் தன்னுடைய விளக்கத்தை கட்சிக்கு அனுப்ப வேண்டும் என்றும் அவர் சம்பந்தமாக கடைசி முடிவு கட்சியின் உயர் பீட கூட்டத்தில் எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (எ)

# காணிப் பிரச்னை தொடர்பில் திருமலையில் கலந்துரையாடல்

திருகோணமலை, ஓக. 26

திருகோணமலை, குச்சவெளி பள்ளவக்குளம் விவசாயக் காணிப் பிரச்னை தொடர்பில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். எஸ். தௌபீக் மற்றும் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமிந்த ஹெட்டியாராச்சி ஆகியோருக்கு இடையிலான கலந்துரையாடல் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.



இதன்போது குறித்த காணிப் பிரச்னையை தீர்ப்பது தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இந்தச் சந்திப்பில் பலநோக்குக் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜுஹான், ஜாயா நகர் விவசாய சம்மேளனத் தலைவர் சமீம், உப தலைவர் நிபார் மற்றும் செயலாளர் இஸ்ஸதீன் ஆகியோர் கலந்து கொண்டனர். (எ)

# கொலைவெறி பிடித்த குழுவின் தலைமை சக்தியாக அநுரகுமார

## கஜேந்திரன் எம். பி. கடும் சாடல்

திருக்கோவில், ஓக. 26

இறுதிப் போரில் ஒன்றரை இலட்சம் தமிழர்களை அழித்து ஒழிப்பதற்காக பல்லாயிரக் கணக்கான இளைஞர்களை திரட்டி இராணுவத்துக்கு கொடுத்த கொலைவெறி பிடித்த குழுவின் தலைமைச் சக்தியாக அநுரகுமார இருக்கின்றார் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

திருக்கோவிலில் உரையாற்றியபோது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

75 வருடங்களாக தமிழருக்கு உரிமை வழங்க மாட்டோம் என்று பேரினவாதிகள் கூறி வருகின்றார்கள். குறிப்பாக பேரினவாதிகள் சிங்கள மக்களுக்கு இவ்வாறாக கருத்துக்களை கூறி வருகின்றார்கள். அவர்களது தேர்தல் விஞ்ஞாபனத்தில் இது ஒரு பௌத்த நாடு. சிங்கள நாடு. இதை பேணிப் பாதுகாப்போம் என்று குறிப்பிட்டுள்ளார்கள். அது மட்டுமன்றி வடக்கு - கிழக்கில் 1000 பௌத்த விகாரை அமைப்பதாகவே கூறி வருகின்றனர். சஜித் பிரேமதாஸவின் தேர்தல் விஞ்ஞாபனமும் அவ்வாறு தான் இருந்திருக்கின்றது. சஜித் பிரேமதாஸ, புத்தசாசன அமைச்சராக இருந்த போது நீராவியடி பிள்ளையார் ஆலய முற்றத்தில் ஒரு பௌத்த பிக்குவின் சடலம் எரிக்கப்பட்டது. இவ்விடயம் அமைச்சரின் ஆலோசனை வழிகாட்டலுடன் தான் நடைபெற்றது. இது தவிர அவரது காலத்தில் தான் யாழ்ப்பாணம் நாவற்குழி பகுதியில் சட்டவிரோத விகாரை கூட கட்டப்பட்டிருந்தது.

அநுரகுமார திஸநாயக்க மோசமான இனவெறி கொண்ட ஒருவர். இறுதிப் போரில் ஒன்றரை இலட்சம் தமிழர்களை அழித்து ஒழிப்பதற்காக பல்லாயிரக்கணக்கான இளைஞர்களை திரட்டி இராணுவத்துக்கு கொடுத்த கொலைவெறி பிடித்த குழு ஒன்றின் தலைமைச் சக்தியாக




அநுர இருக்கின்றார். அது மாத்திரமன்றி வடக்கு கிழக்கை வழக்கு தாக்கல் செய்து பிரித்த இனவெறியர்கள் இவர்கள். இவர்கள் எல்லோரது நிலைப்பாடுகளும் இவைகள் தான். இதில் நாமல் ராஜபக்ஷ விதிவிலக்கானவரல்லர். இதனால் தான் இவர்களிடம் தமிழருக்கு உரிமை கொடுக்க போகின்றோம் எனக் கூறினால் தேர்தல் விஞ்ஞாபனத்தில் எங்களின் சிங்கள மக்களுக்குச் சொல்லுங்கள். இந்த தோல்வியடைந்த ஒற்றையாட்சியை ஒழிக்க போகின்றோம். சமஷ்டியை கொண்டு வரப் போகின்றோம் என்பதை தேர்தல் விஞ்ஞாபனத்தின் ஊடாக வெளிப்படுத்தி வாருங்கள் என நாங்கள் கூறுவது நம்பிக்கைக்காக தான் - என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 70 ஏவுகணைகளை வீசி ஹிஸ்புல்லா தாக்குதல்!

## இஸ்ரேலில் அவசர நிலை பிரகடனம்




ஜெருசலேம், ஒக. 26

**வடக்கு இஸ்ரேல் மீது நள்ளிரவு முதல் ஹிஸ்புல்லா படையினர் 70 ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தினர். இதனால் இஸ்ரேலில் இராணுவ அவசர நிலை பிறப்பிக்கப்பட்டுள்ளது.**

இஸ்ரேலுக்கும் ஹமாஸ் அமைப்பினருக்கும் இடையே சண்டை நீடித்து வருகிறது. பலஸ்தீனத்தின் காஸா நகரை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினருக்கு லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா அமைப்பு ஆதரவு வழங்கி வருகிறது. இதனால், லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா அமைப்பினரின் முகாம்களை குறிவைத்து அவ்வப்போது இஸ்ரேல் வான்வழித் தாக்குதல் நடத்தி வருகிறது. இதற்குப் பதிலடியாக ஹிஸ்புல்லா அமைப்பினரும் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், தெற்கு லெபனானின் மீது இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலுக்கு பதிலடியாகவும் ஹமாஸ் அமைப்பின் தலைவர் சயீத் கொலைக்கு பதிலடி கொடுக்கும் விதமாகவும் ஹிஸ்புல்லா அமைப்பு இஸ்ரேல் மீது தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளது. இஸ்ரேலின் வடக்கு பகுதியில் நள்ளிரவு முதல் ஹிஸ்புல்லா படையினர், 70 ரொக்கெட் ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தினர். ஹிஸ்புல்லா தாக்குதலை அடுத்து 48 மணி நேரத்துக்கு இராணுவ அவசர நிலையை இஸ்ரேல் அறிவித்துள்ளது. இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தலைமையில் போர் இராணுவ கூட்டம் நடந்த நிலையில், அவசர நிலை பிறப்பிக்கப்பட்டுள்ளது. (எ)



# அமைதியின் பக்கம் இந்தியா நிற்கிறது

## உக்ரைனில் மோடி விளக்கம்

கீவ், ஒக. 26

ரஷ்யா - உக்ரைன் மோதலில் இந்தியா நடுவுநிலை வகிக்கவில்லை என்றும் இந்தியா அமைதியின் பக்கம் நிற்கிறது என்றும் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

உக்ரைன் சென்ற பிரதமர் நரேந்திர மோடி அந்த நாட்டு ஜனாதிபதி ஜெலன்ஸ்கியை அவரது மாளிகையில் சந்தித்து பேச்சு நடத்தினார். இரு தலைவர்களும் தனிப்பட்ட முறையிலும் பின்னர் இரு நாடுகளின் தூதுக் குழுக்களுடனும் உரையாடினர். அப்போது பேசிய மோடி, "பேச்சுகள் மற்றும் தூதரக நடவடிக்கைகள் மூலம் மட்டுமே மோதலுக்கு தீர்வு காண முடியும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடு.

உக்ரைனும் ரஷ்யாவும் பேச்சுகளில் ஈடுபட வேண்டும். இதன்மூலம் மோதலுக்கு தீர்வு காண வேண்டும். அமைதிக்கான முயற்சிகளில் முனைப்பான பங்களிப்புகளைச் செய்ய இந்தியா தயாராகவுள்ளது. இந்த மோதலில் இந்தியா நடுவு நிலை வகிக்கவில்லை. தொடக்கம் முதலே அது ஒரு பக்கம் இருக்கிறது. அது அமைதியின் பக்கம். இந்த மோதலில் முதல் உயிரிழப்பு ஒரு குழந்தை என்பது மனதை வேதனைப்படுத்துகிறது எனத் தெரிவித்தார். (எ)

# இந்திய பங்களாதேஷ் எல்லையில் பதற்றம்



புதுடில்லி, ஒக. 26

இந்திய - பங்களாதேஷ் எல்லையில் சில பகுதிகளில் இந்திய எல்லைப் பாதுகாப்புப் படையினர் வேலி அமைக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். வேலி அமைப்பதற்கு பங்களாதேஷ் எல்லை பாதுகாப்புப் படையினர் எதிர்ப்புத் தெரிவித்து தடுத்துள்ளனர். இதனால், இரு தரப்புக்கும் இடையே மோதல் போக்கு உருவாகியுள்ளது.

ஷேக் ஹசீனாவுக்கு எதிராக மாணவர்கள் போராட்டம் தீவிரமடைந்த நிலையில், பிரதமர் பதவியை இராஜினாமா செய்துவிட்டு ஷேக் ஹசீனா கடந்த 5ஆம் தேதி இந்தியா தப்பி வந்தார். இதையடுத்து பங்களாதேஷில் கலவரம் தீவிரமடைந்த நிலையில், அங்குள்ள சிறுபான்மையினர் இந்தியாவுக்கு அகதிகளாக நுழையும் முயற்சியில் இறங்கினர்.

இதைத் தடுக்க எல்லையில் இந்திய பாதுகாப்புப் படையினர் குவிக்கப்பட்டனர். இதன் தொடர்ச்சியாக, எல்லைப் பகுதியில் குறிப்பிட்ட சில இடங்களில் வேலி அமைக்கும் பணியில் இந்திய பாதுகாப்புப் படையினர் ஈடுபட்ட நிலையில், அதற்கு பங்களாதேஷ் படையினர் எதிர்ப்பு தெரிவித்து தடுத்துள்ளனர். எனினும் இருதரப்புக்கும் இடையே தாக்குதல் எதுவும் நிகழவில்லை என்று இந்திய இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர். (எ)



# 2025இல் பூமிக்கு திரும்புவார் சுனிதா

வாஷிங்டன், ஒக. 26

சர்வதேச விண்வெளி மையத்தில் கடந்த ஜூன் மாதம் முதல் உள்ள சுனிதா வில்லியம்ஸ், அடுத்த ஆண்டு (2025) பெப்ரவரியில் பூமிக்கு திரும்புவார் என நாசா அறிவித்துள்ளது.

இது தொடர்பில் நாசாவின் தலைமை நிர்வாகி பில் நெல்சன் தெரிவித்தவை வருமாறு, "விண்வெளிப் பயணம் மிகவும் ஆபத்தானது. அது பாதுகாப்பான விண்கலனாக இருந்தாலும் ஆபத்து என்பது உள்ளது. அதுவும் சோதனை அடிப்படையிலான பயணம் பாதுகாப்பானது அல்ல. அதனால் சுனிதா வில்லியம்ஸ், புட்ச் வில்மோர் ஆகியோரை சர்வதேச விண்வெளி மையத்தில் தங்க வைப்பது என முடிவு செய்துள்ளோம்.

போயிங்கின் ஸ்டார்லைனர் விண்கலனை யாருமின்றி பூமிக்கு கொண்டுவர முடிவு செய்துள்ளோம். அதுதான் பாதுகாப்பான வழியாக இருக்கும். இந்த பணியில் ஈடுபட்டுள்ள நாசா மற்றும் போயிங் நிறுவனத்துக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் - என்றார். (எ)

## உக்ரைனில் போரில் உயிர்நீத்த

# குழந்தைகள் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தினார் மோடி

கீவ், ஒக. 26

உக்ரைன் சென்ற இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கீவ் நகரில் போரில் உயிர்நீத்த குழந்தைகள் நினைவிடத்தில் அந்த நாட்டு ஜனாதிபதியுடன்



இணைந்து அஞ்சலி செலுத்தினார்.

பிரதமர் மோடி, போரால் பாதிக்கப்பட்டுள்ள உக்ரைன் நாட்டுக்குச் சென்றார். போலந்து நாட்டிலிருந்து ரயில் மூலம் உக்ரைன் தலைநகர் கீவ் சென்றடைந்த மோடி, அங்குள்ள தேசிய வரலாற்று அருங்காட்சியகத்தில் உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியை சந்தித்தார்.

பிறகு இரு தலைவர்களும் அங்கிருந்த மல்ரிமீடியா காட்சிக் கூடத்துக்கு சென்றனர். அங்கு ரஷ்யாவுடனான போரில் ஏராளமான குழந்தைகள் கொல்லப்பட்டமை தொடர்பான காட்சிகளை மோடி பார்வையிட்டார். பிறகு இரு தலைவர்களும் போரில் உயிர்நீத்த குழந்தைகள் நினைவிடத்துக்கு சென்றனர். ஏராளமான பொம்மைகள் வைக்கப்பட்டிருந்த அந்த இடத்தில் பிரதமர் மோடி கூப்பிய கரங்களுடன் அமைதியாக பிரார்த்தனை செய்தார்.பிறகு சிறிய பொம்மையை வைத்து அஞ்சலி செலுத்தினார். (எ)

# ஆற்றில் பேருந்து கவிழ்ந்து நேபாளத்தில் கோர விபத்து

## உயிரிழந்த 24 இந்தியர்களின் உடல்களை சிறப்பு விமானத்தில் கொண்டுவர ஏற்பாடு

காத்மண்டு, ஒக. 26

நேபாளத்தில் ஆற்றில் பேருந்து கவிழ்ந்து கோர விபத்தில் சிக்கியது. இதில் உயிரிழந்த 24 இந்தியர்களின் உடல்களை சிறப்பு விமானத்தில் கொண்டுவர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, நேபாளத்தில் பேருந்து விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா 2 இலட்சம் ரூபாய் ( இலங்கை மதிப்பில் 709835 ரூபாய்) நிவாரண நிதி வழங்க இந்தியப் பிரதமர் மோடி உத்தரவிட்டுள்ளார்.



கடந்த வெள்ளிக்கிழமை [illegible] போக்ஹாரா பகுதியில் இருந்து காத்மண்டு [illegible] 43 [illegible] கொண்டிருந்த பேருந்து கட்டுப்பாட்டை இழந்து ஆற்றில் விழுந்தது. இந்த விபத்தில் 27 பேர் உயிரிழந்தனர். அவர்களில் 24 பேர் இந்தியர்கள். குறிப்பாக மகாராஷ்டிராவைச் சேர்ந்தவர்கள். உயிரிழந்தவர்களின் உடல்களை இந்தியாவுக்கு கொண்டுவர மகாராஷ்டிரா அரசு தீவிர நடவடிக்கை எடுத்தது.

முதல்வரின் கோரிக்கையை ஏற்ற மத்திய அரசு இந்திய விமானப்படையின் சிறப்பு விமானம் மூலம் உயிரிழந்தவர்களின் சடலங்கள் கொண்டுவரப்பட்டு அவர்களது குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்படவுள்ளது. (எ)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# சீன கடற்படை கப்பலும் இலங்கை வருகின்றது!

## இந்தியா, அமெரிக்கா அவதானம்



கொழும்பு, ஒக. 26

**சீனாவின் கற்படை கப்பல் ஒன்று இந்த மாத இறுதியில் இலங்கையை வந்தடையவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.**

கடற்படை ஒத்துழைப்பை கட்டியெழுப்பும் நோக்கில் சீன கடற்படைக்கு சொந்தமான "பிளான்ஸ் போ லாங்" என்ற கப்பலே இவ்வாறு வரவுள்ளது. இந்தக் கப்பல் சீனாவின் வடகிழக்கில் உள்ள டேலியன் மாகாணத்தில் இருந்து தனது பயணத்தை ஆரம்பித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கைக்கு வரும் இந்தக் கப்பல் 85 மீற்றர் நீளமும், 11 மீற்றர் அகலமும் கொண்டது. 18 நொட்ஸ் வேகத்தில் பயணிக்கவல்லது.

கடற்படை அதிகாரிகளிடையே தொழில்முறை திறன்களை வளர்ப்பது மற்றும் பிற நாடுகளின் கடற்படைகளுடன் ஒத்துழைப்பை மேம்படுத்துவது மற்றும் பொதுவான எதிர்காலத்துடன் கடல் நடவடிக்கைகளை தொடங்குவது இந்த பயணத்தின் நோக்கமாகும் என்று சீனாவின் தேசிய பாதுகாப்பு அமைச்சகத்தின் பேச்சாளர் கேணல் ஜாங் சியாவோங் தெரிவித்துள்ளார்.

இந்த கப்பல் தனது பயணத்தில் வியட்நாம், இந்தோனேசியா ஆகிய நாடுகளுக்கும் பயணிக்கும். அத்துடன், ஹொங்கொங்கில் தொழில்நுட்ப வசதிகளை பெறும் என்றும் குறித்த அதிகாரி கூறியுள்ளார்.

இந்த நிலையில், அமெரிக்காவின் யு. எஸ். எஸ். ஒகேன் என்ற கப்பல் கடந்தவாரம் கொழும்பு துறைமுகத்துக்கு வந்து சென்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், தற்போது வருகைதரவுள்ள சீன கடற்படை கப்பல் தொடர்பில் இந்தியாவும் அமெரிக்காவும் அவதானம் செலுத்தியுள்ளன. (ஐ)

# ஜனநாயக விரோத சக்திகளை மக்கள் தோற்கடிக்கவேண்டும்!

## தேசிய மக்கள் சக்தி சொல்கிறது

கொழும்பு, ஒக. 26

ஜனநாயகத்துக்கு விரோதமான - மக்களின் வாக்குரிமையை பறித்தவர்களை எதிர்வரும் தேர்தலில் தோற்கடிக்குமாறு மக்களிடம் கேட்டுக்கொள்கின்றோம் - என்று தேசிய மக்கள் சக்தியை சேர்ந்த சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், பஸில் ராஜபக்ஷ, மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்டோர் குற்றவாளிகள் என்று தீர்ப்பளித்த உச்ச நீதிமன்றம், இந்த நாட்டின் ஜனநாயகம் தொடர்பாக தற்போது தெளிவான தீர்ப்பை வழங்கியுள்ளது.

ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட பிரதிவாதிகள் இந்நாட்டு மக்களின் வாக்குரிமையைப் பறிக்கும் வகையில் செயல்பட்டுள்ளனர் என்பதை உச்ச நீதிமன்றம் மிகவும் சம்பிரதாயமான முறையில் இந்தச் சமூகத்தின் முன் வெளிப்படுத்தியுள்ளது. இரண்டு சந்தர்ப்பங்களிலும் குற்றவாளிகள் அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்காக முன்வந்துள்ளனர்.

வாக்குகள் இல்லை என்று கூறிய ரணில் விக்கிரமசிங்கவின் வாக்குகளை அழிப்பது மக்கள் கையில்தான் உள்ளது. ரணில் விக்கிரமசிங்கவும் ராஜபக்ஷவின் கூட்டு ஆட்சியும் தனித் தனியாக ஒன்று சேர்ந்து மக்களின் உரிமைகளை பறித்தது.

மக்களின் வரிப்பணக் கொள்ளை, பத்திரப்பதிவு மோசடி, அரசு வளங்களை விற்பனை செய்தல் போன்ற வற்றுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்துக்கு பலமுறை சென்றுள்ளோம். கடந்த முறை வழங்கப்பட்ட இந்தத் தீர்மானம் இந்நாட்டு மக்கள் வென்றெடுத்த உரிமையாகும். அந்த உரிமையை உறுதிப்படுத்தியது தேசிய மக்கள் சக்தியின் வெற்றி. நாங்கள் எங்கள் பொறுப்பை நிறைவேற்றி விட்டோம். ஜனநாயகத்துக்கு விரோதமான - மக்களின் வாக்குரிமையை பறித்தவர்களை எதிர்வரும் தேர்தலில் தோற்கடிக்குமாறு மக்களிடம் கேட்டுக்கொள்கின்றோம் - என்றார். (ஐ)

### கிளப் வசந்த படுகொலை:

# முன்னாள் சிப்பாய் உட்பட மேலும் மூவர் கைதாகினர்!

கொழும்பு, ஒக. 26

கிளப் வசந்தவை சுட்டுக் கொன்றார் என்று கருதப்படும் முன்னாள் சிப்பாய் ஒருவர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிளப் வசந்த என்றழைக்கப்படும் சுரேந்திர வசந்த பெரேரா உட்பட இருவர் கடந்த ஜூலை மாதம் 8ஆம் திகதி அத்துருகிரிய பிரதேசத்தில் உள்ள பச்சை குத்தும் நிலையத்தில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டனர். இந்தக் கொலை தொடர்பில் பயங்கரவாத தடுப்பு பிரிவு பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் கதிர்காமம் பகுதியில் நடத்தப்பட்ட விசேட நடவடிக்கையில் மூவர் கைது செய்யப்பட்டனர். கைதானவர்களில் கிளப் வசந்த மீது துப்பாக்கிச்சூடு நடத்தினார் என்று கூறப்படும் சண்டி என்ற அஜித் ரோஹணவும் அடங்குவார். இவர் அஹுங்கல்ல பிரதேசத்தை சேர்ந்த 31 வயது நபராவார். இவர், முன்னாள் படை சிப்பாய் ஆவார். இவர் முன்னரும் கொலை வழக்கு ஒன்றில் கைதானவராவார்.

இதேநேரம், துப்பாக்கிச் சூடு நடத்தியவர்களுக்கு வீடு ஒன்றை வாடகைக்கு கொடுத்தவரும் அவர்களை கதிர்காமத்துக்கு பேருந்தில் அழைத்துச் சென்றவர்களுமாக இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானோரிடம் இருந்து ரி - 56 ரக துப்பாக்கி, ஒரு பிஸ்டல் ரக துப்பாக்கி மற்றும் ரி-56 ரக தோட்டாக்கள் 165, 9 மி. மீ. தோட்டாக்கள் 77, 17 வகையான தோட்டாக்கள், கைவிலங்கு, 3 கைபேசிகள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)



# இந்திய கடற்படை கப்பல் இன்று கொழும்பு வருகிறது

கொழும்பு, ஒக. 26

இந்திய கடற்படைக்குச் சொந்தமான "ஐ. என். எஸ் மும்பை" எனும் போர்க் கப்பல் இன்று திங்கட்கிழமை கொழும்பு வருகின்றது.


கொழும்பு துறைமுகத்தில் 3 நாட்கள் தரித்து நிற்கும் இந்தக் கப்பல் இந்திய - இலங்கை கடற்படையினருக்கு இடையிலான அனுபவங்களைப் பரிமாறிக்கொள்ளும் வகையில் இந்தப் பயணம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இலங்கை வரும் கப்பலின் கட்டளை அதிகாரி இலங்கையின் மேற்கு கடல் பரப்புக்கான தளபதி ரியர் அட்மிரல் டபிள்யூ. டி. சி. யு. குமாரசிங்கவை சந்தித்துக் கலந்துரையாடுவார்.

கப்பல் வருகையையொட்டி பல்வேறு நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# பீடி இலை இறக்குமதி வரி விரைவில் திருத்தப்படும்!

## நிதி இராஜாங்க அமைச்சர் அறிவிப்பு



கொழும்பு, ஒக. 26

சட்டவிரோத பீடி இலை இறக்குமதியை தடுக்கும் வகையில் விதிக்கப்படும் வரியில் திருத்தம் செய்யப்படவுள்ளது. இது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு அடுத்த வாரம் வெளியிடப்படும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

எனினும், தற்போது பீடி உற்பத்தியின் போது அறவிடப் படும் இரண்டு ரூபாய் வரியே பீடி இலை இறக்குமதியின்போதும் அறவிடப்படுகிறது. பீடி இலை இறக்குமதிக்கு விதிக்கப்பட்டுள்ள வரி கற்பனையான வரி. இதன்மூலம் எதிர்பார்த்த வருமானம் 300 கோடி ரூபாய். ஆனால், 100 கோடி ரூபாய்க்கும் குறைவான வருமானமே கிடைத்துள்ளது.

எனவே, சந்தையில் கிடைக்கும் 90வீத பீடி இலைகள் சட்டவிரோதமான முறையில் நாட்டுக்கு வந்துள்ளன. பீடி இலை இறக்குமதிக்கு குறைந்த விலையில் அனுமதி வழங்கப்படுவதால், அதற்கான வர்த்தமானி அறிவிப்புடன் வரி திருத்தம் செய்யப்படுவதால், சட்டவிரோத சந்தைக்கு சவால் விடுக்கப்படும் - என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (ஐ)

# 7 மாதத்தில் லீசிங் செலுத்தாத 5,000 வாகனங்கள் பறிமுதல்!

கொழும்பு, ஒக. 26

லீசிங் தவணையை செலுத்த தவறிய குற்றச்சாட்டில் கடந்த 7 மாதங்களில் மட்டும் 5 ஆயிரத் துக்கும் அதிகமான வாகனங் கள் லீசிங் நிறுவனங்களால் கையப்படுத்தப்பட்டன என்று லீசிங் மற்றும் கடன் வழங்குநர் கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த வருடத்தில் 10 ஆயிரத்துக்கும் அதிகமான வாகனங் கள் இவ்வாறு கையகப்படுத்தப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேநேரம், லீசிங் தவணைகளை வழங்குவதாக வாகனங்களை பெற்று நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக தவணைகளை சரியாக செலுத்த முடியாமல் இருப்பவர்களுக்காக சலுகைகளை வழங்குமாறு கடந்த சில நாட்களாகவே அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக சங்கத்தின் தலைவர் அசங்க ருவன் பொத்துபிட்டிய கூறியுள்ளார்.

நிதி நிறுவனங்களிடம் காணி மற்றும் சொத்துக்களை அடமானம் வைத்தவர்களுக்காக கடனை மீள செலுத்த டிசெம்பர் 15ஆம் திகதி வரை சலுகை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. பொருளாதார ரீதியில் உறுதியாக்க மேற்கொண்டபோதிலும் இதுவரை இந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.



இதனால், எதிர்வரும் டிசெம்பர் 15ஆம் திகதியின் பின்னர் காணி மற்றும் சொத்து களை அடமானம் வைத்தவர்கள் அவற்றை இழக்கும் அபாயம் உள்ளது. லீசிங்கில் பெற்ற வாகனங்களுக்கு மூன்று தவணைகளை செலுத்த முடியாமல் போனால் அவை வலுக்கட்டாயமாக கொண்டு செல்லப்படுகின்றன. இதனால், மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, இது விடயத்தில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றும் ருவன் பொத்துப்பிட்டிய தெரிவித்தார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தர்சிலை...

ஆணைகளை பிறப்பிக்கின்றனர். நாளை ஏனைய மதங்களுக்கும் அழுத்தங்களை கொடுக்கலாம். இது மக்களின் மத உரிமையை இல்லாமல் செய்கின்ற முயற்சி.

இன்று தற்போதைய அரசாங்கமும் ஆட்சி அதிகாரத்தைப் பெற முற்படுகின்ற மத சார்பற்றவர்களும் மதங்களை பின்பற்றும் உரிமையை இல்லாது செய்ய முற்படுகின்றனர். இந்த வெட்கம் கெட்ட செயல்பாடுகளில் ஈடுபட வேண்டாம்.

ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் எந்த மதத்தையும் பின்பற்றுவதற்கு உரிமை உண்டு. இந்தக் கணக்கெடுப்பை மேற்கொண்டு மதச்சார்பற்ற நிலையை தோற்றுவிக்க நடவடிக்கை எடுத்து வரும் அரச அதிகாரிகளுக்கு எதிராக எமது ஆட்சியில் உரிய நடவடிக்கை எடுப்போம் - என்றார்.

நேற்றுமுன்தினம் பொலநறுவையில் நடந்த மக்கள் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

## ரணிலுக்கு...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சையாக போட்டியிடுகிறார். ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டு கட்டுப்பணம் ஏற்றுக்கொள்ளப்பட்டதும் முதல் ஆளாக அவர் கடந்த ஜூலை 26ஆம் திகதி கட்டுப்பணம் செலுத்தியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சிறீதரன்...

உணர்ந்து வாக்களிப்பார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு உள்ளது. இலங்கை தமிழ் அரசு கட்சியைப் பொறுத்தமட்டில் பெரும்பாலானவர்கள் கொள்கையிலே உடன்பாடாக இருக்கின்றார்கள். அவர்கள் நிச்சயம் எனக்கு வாக்களிப்பார்கள்", இவ்வாறு அவரின் பிரசார பயணத்தின்போது தெரிவித்தார். (ஐ)

## ரணில்...

நடைபெறும் என்றும் அவர் கூறியுள்ளார்.

நாட்டில் முன்னெடுக்கப்பட வேண்டிய பொருளாதார திட்டம் தொடர்பில் பாராளுமன்றத்துக்கும் நாட்டுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார். சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையை ஏற்கமாட்டோம் என்று சிலர் சொல்கின்றனர். ஆனால், ஒட்டுமொத்தமாக நாங்கள் ஓர் அரசாங்கம் என்ற வகையில் சர்வதேச அமைப்புகள் - சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, நிதி வழங்கும் நாடுகள், பாரிஸ் கிளப் உறுப்பினர்கள் போன்றவர்களுடன் கலந்துரையாடி தீர்மானித்த பாதையே இது. நாங்கள் இன்னமும் கடனில் சிக்குண்டுள்ளோம். இலங்கை தொடர்ந்து இவ்வாறான கடன்நிலையில் நீடிக்க முடியாது.

ஜனாதிபதித் தேர்தலில் வென்றதும் 2025 வரவு - செலவு திட்டம் குறித்து சிந்திக்க வேண்டும். அதற்கான கட்டமைப்பு பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. மக்களின் விருப்பத்துக்கு ஏற்ப பல்வேறு விடயங்களை உள்வாங்க வேண்டியுள்ளது. தேர்தலின் பின்னர் பட்ஜெட் சமர்ப்பிக்கப்படும் இல்லையென்றால், 3 மாதங்களுக்கான நிதி ஒதுக்கீட்டு வாக்கெடுப்பு நடைபெற வேண்டும். பின்னர் பாராளுமன்றத்தை கலைப்பதாக அறிவிக்க வேண்டும்.

பாராளுமன்றத் தேர்தல் முடிவடைந்ததும் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்த வேண்டும். பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் அது நடைபெறாது. ஏனெனில், அதற்கு முன்னர் சட்டங்களில் சில மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும் - என்றார்.

ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு அவர் அளித்த நேர்காணலிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஐ)

# விவசாய கடனை இரத்து செய்யும் யுகத்தை உருவாக்க அணிதிரள்க

## விவசாயிகளுக்கு சஜித் அழைப்பு

பொலநறுவை, ஒக. 26

நாட்டுக்கு உணவளிக்கின்ற விவசாயிகளுக்கு நன்றி செலுத்தும் வகையில் விவசாய கடன்களை இரத்துச் செய்வோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

விவசாயிகளுக்குத் தேவையான சிறந்த தரத்திலான 50 கிலோ கிராம் நிறையுள்ள உர மூடை ஒன்றை 5000 ரூபாய்க்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். விவசாய இரசாயன மருந்துகள், உரம் என்பனவற்றுக்கு ஒழுங்கு முறையான விலை நிர்ணயத்தை மேற்கொண்டு, இருட்டடிப்புச் செய்கின்ற வர்த்தகர்களின் விலை அதிகரிப்புக்கு இடமளிக்காது, மக்களால் ஏற்றுக்கொள்ள முடியுமான விலைக்குப் பொருட்கள் வழங்கப்படும். உர விநியோகத்தின்போது கமநல சேவைகள் மத்திய நிலையத்தை மையமாகக் கொண்டு வெளிப்படை தன்மையுடன் இந்த வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்றும் சஜித் கூறினார்.

விவசாயிகளுக்கு, மீனவர்களுக்கு, ஓட்டோ சாரதிகளுக்கு, பாடசாலை போக்குவரத்து சேவையாளர்களுக்கு, ஆலை உரிமையாளர்களுக்கு எரிபொருள் நிவாரணம் வழங்கப்படும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல், கொரோனா அச்சுறுத்தல், உர மோசடி, நனோ உர மோசடி போன்றவற்றின் ஊடாக விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தம்மிடம் உள்ள பணத்தைக் கொண்டும் தங்க ஆபரணங்களை அடைவு வைத்து, கிடைக்கின்ற பணத்தை கொண்டும் விவசாயத்தில் ஈடுபடுகின்ற விவசாயிகளுக்கு கடந்த காலங்களில் அடிக்கு மேல் அடி விழுந்து அழுத்தங்களுக்கு உள்ளாகி இருக்கின்றார்கள். அவ்வாறு அழுத்தங்களுக்கு உள்ளாகி மூன்று வேலையும் உணவு உண்ண முடியாமல் இருக்கின்ற விவசாயிகளின் விவசாய கடனை இரத்து செய்வோம்.

அத்தோடு விவசாயிகளின் விவசாய உற்பத்திகளுக்கு நியாயமான நிர்ணய விலை ஒன்று பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும். மோசடியான முறையில் விவசாயிகளையும் நுகர்வோர்களையும் பாதிக்கின்ற ஏற்பாடுகளுக்கு இடமளிக்க முடியாது. நுகர்வோருக்கும் சாதாரண விலையில் பொருள் கிடைப்பதோடு நெல்லுக்கும் உயர்ந்த நிர்ணய விலை ஒன்றை வழங்க நடவடிக்கை எடுப்பேன் என்றும் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். (எ)

## அன்று...

அரசுக் கட்சியின் மூத்த தலைவர்களுள் ஒருவரான ஞா. சிறிநேசன் எச்சரித்துள்ளார்.

தமிழ்ப் பொது வேட்பாளருக்கான பிரசாரம் தொடர்பான கலந்துரையாடல் நேற்று மட்டக்களப்பில் தமிழ் மக்கள் பொதுச்சபையின் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் பங்கேற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், ஜீ. ஜீ. பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் இந்திய மக்களின் குடியுரிமை பறிப்பை ஆதரித்தது. இது கட்சியின் முடிவுக்கு மாறாக எடுக்கப்பட்ட தீர்மானம். இதனால்தான், அதிலிருந்து வெளியேறி இலங்கை தமிழ் அரசுக் கட்சி உருவானது.

இதன் பின்னர், அந்தக் கட்சி காணாமல் போனது. ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் மகன் குமார் பொன்னம்பலம் மன்னிப்புக் கோரியதன் மூலம் ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் பாவம் கழுவப்பட்டது.

தமிழ்ப் பொதுவேட்பாளரை ஆதரிப்பதே தற்போதைக்கு சரியான முடிவு. தமிழ் அரசுக் கட்சியின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்கிறார்கள். எனவே, தமிழ் அரசுக் கட்சி தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்க வேண்டும். இல்லையேல், அன்று காங்கிரஸ் கட்சிக்கு நேர்ந்தது இன்று தமிழ் அரசுக் கட்சிக்கும் நேரும் - என்றார். (ஐ)

## தமிழ்...

தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பின் ஏற்பாட்டில் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளுடனான சந்திப்பு நேற்று வவுனியாவில் நடந்தது. இதிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு -

கடந்த 8 ஜனாதிபதித் தேர்தல்களில் தென்னிலங்கை வேட்பாளர்களுக்கே தமிழ் மக்கள் வாக்களித்தார்கள். தமிழ் மக்கள் காட்டிய அந்த நல்லிணக்க செய்தியை ஆட்சியில் இருந்த எந்த ஜனாதிபதிகளும் ஏற்று தமிழ் மக்களுக்கான தீர்வையோ அல்லது போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான அடிப்படை பிரச்னையோ இதுவரை காலமும் தீர்க்கவில்லை.

இந்த அடிப்படையிலே நாங்கள் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தியுள்ளோம். வடக்கு, கிழக்கில் வாழ்கின்ற தமிழ் பேசும் மக்கள் வடக்கு - கிழக்குக்கு வெளியே இருக்கக்கூடிய மக்கள் அனைவரும் தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்க வேண்டும் என்பதுதான் எங்களின் கோரிக்கையாகும்.

வடக்கு, கிழக்கில் 12 இலட்சத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் உள்ளார்கள். இவர்களில் 50 வீதத்துக்கும் அதிகமானோரின் வாக்குகளை பெறுவதற்கான பணிகளை நாங்கள் ஆரம்பித்து இருக்கின்றோம். நிச்சயமாக இந்த ஜனாதிபதித் தேர்தலிலே தமிழ் மக்கள் மத்தியில் விழிப்புணர்வு - அரசியல் ரீதியான மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது. இதில் 50 வீதமான மக்கள் தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிப்பார்கள் - என்றார். (ஐ)

## தென்னிலங்கை

கூட்டணி முழுமையாக முன்னெடுக்கும்.

மாவட்ட ரீதியாக முகவர்களை நியமிக்கவும் மாவட்ட ரீதியான தேர்தல் பணிமனைகளை திறக்கவும் வேண்டியுள்ளன. இது தொடர்பில் சிவில் அமைப்புகளுடன் கலந்துரையாடவுள்ளோம்.

என்ன கொள்கைகளுக்காக பொது வேட்பாளரை நிறுத்தினமோ. அந்தக் கொள்கைகளை வெற்றியடையச் செய்யும் வகையில் செயல்பாடுகளை முன்னெடுப்போம். எமது முடிவுகள் தொடர்பாக சிவில் அமைப்புகளுடன் பேசி பொதுவான ஒரு முடிவை எடுத்து அதனை முன்னெடுத்து செல்வோம்.

தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பில் அங்கம் வகிக்கும் சில கட்சிகள் தென்னிலங்கை வேட்பாளர்கள் அழைத்ததற்கு அமைய அவர்களை சந்தித்துள்ளார்கள். இதன்போது, தேசிய இனப் பிரச்னை தீர்க்கப்படவில்லை, தென்பகுதி வேட்பாளர்களை பல தடவைகள் வாக்களித்து இருக்கிறோம். ஆனால், எமது நம்பிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை என்று தெரியப் படுத்தினர்கள்.

நாம் ஒன்று சேர்ந்து பொதுவேட்பாளருக்கு தொடர்ந்தும் வாக்கு சேகரிப்பு நடவடிக்கையில் ஈடுபடவுள்ளோம். எதிர்காலத்தில் காத்திரமான பேச்சுக்கு தென்னிலங்கை வேட்பாளர்கள் வருவார்களாக இருந்தால் அது தொடர்பில் நாம் கூடி ஆராய்ந்து முடிவுகளை எடுப்போம் - என்றார். (ஐ)

## நாணய நிதியத்துடன்...

வேண்டுமா இல்லையா என்பதை மக்கள் தீர்மானிப்பார்கள். நான் வெற்றிபெற வேண்டும் என்றால் வீடுவீடாக சென்று மக்களுக்கு உண்மை நிலையை தெளிவுபடுத்த ஆரம்பிக்க வேண்டும். அன்று நாடு வீழ்ச்சியடையும் போது பலரும் எம்முடன் இணைந்து கொண்டு நாட்டை கட்டியெழுப்ப முன்வந்தனர். ஆனால், ஐக்கிய மக்கள் சக்தியும் மக்கள் விடுதலை முன்னணியும் நாட்டுக்கு அநீதி செய்தன. அவர்கள் அதிகாரத்தை பெற்றுக்கொள்ளவே முயற்சித்தனர்.

ரணசிங்க பிரேமதாஸவுக்கு எதிராக குற்றப்பிரேரணை கொண்டுவந்த போதும் நானே அவரைப் பாதுகாத்தேன். அதேபோன்று அவர் கொலை செய்யப்பட்டபோதும் நானே அந்த இடத்துக்கு முதலில் சென்றேன். இதனை அவர்கள் மறந்துள்ளார்கள். அவர்கள் ஓடியதாலேயே நான் பொறுப்பேற்றேன். நாங்கள் ஓர் அணியாக செயல்பட்டு நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் நடவடிக்கை எடுத்தது. இந்த அணியே உலக நாடுகளுடனும் சர்வதேச நாணய நிதியத்துடனும் கலந்துரையாடி உதவிகளை பெற்றுக்கொண்டு இந்த நிலைக்கு நாட்டை கொண்டுவந்தோம்.

அதிகாரத்துக்கு வந்தால் வரியை குறைப்பதாக சஜித் பிரேமதாஸவும் அநுரகுமாரவும் கூறுகின்றனர். அவர்கள் இதனை எவ்வாறு செய்யப்போகிறார்கள் என்பதை முதலில் தெரிவிக்க வேண்டும். வரியை குறைத்ததாலேயே நாடு வீழ்ச்சியடைந்தது என்பதை மக்கள் மறந்து விடக்கூடாது.

இரவில் விழுந்த குழியில் பகலில் விழவேண்டுமா? நாணய நிதியத்துடன் செய்துள்ள ஒப்பந்தத்தை திருத்துவதாக தெரிவிக்கின்றனர். இரண்டு தரப்பினருடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தத்தை இலகுவில் மாற்ற முடியாது. அவ்வாறு செய்வதாக இருந்தால், 18 நாடுகளுடன் 3 அமைப்புகளுடன் கலந்துரையாட வேண்டும். நாணய நிதியத்தின் உதவியை பெற்றுக்கொள்ள எங்களுக்கு ஒரு வருடகாலம் சென்றது.

மேலும் நாணய நிதியத்தின் அதிகாரிகள் அடுத்த வருடம் ஆரம்பத்தில் இலங்கை வர இருக்கின்றனர். எமது முன்னேற்ற நடவடிக்கை தொடர்பில் இதன்போது அவர்கள் ஆராய்வார்கள். நாங்கள் இந்தத் தேர்தலில் வெற்றிபெற்றால் தொடர்ந்து நாணய நிதியத்தின் நிபந்தனைகளுடன் முன்னுக்கு செல்லத் தயார்.

ஆனால், சஜித், அநுர என்ன சொல்லப்போகிறார்கள். நிபந்தனைகளை திருத்தியமைப்பதாக இருந்தால் ஒரு மாத காலம் செல்லும் தற்போது நாணய நிதியம் எமக்கு வழங்கி இருக்கும் நிதி ஜனவரி வரைக்கும் போதும் அதன் பின்னர் நிபந்தனைகளை மாற்றியமைக்கும்வரை நாணய நிதியத்தின் 700 பில்லியன் டொலர் நிறுத்தப்படும். அப்படியானால் நாட்டை கொண்டு செல்ல இவர்கள் பணம் எவ்வாறு பெறுவார்கள்?

அவர்கள் நாணய நிதியத்தின் நிபந்தனைகளை மாற்றியமைப்பதாக தெரிவிப்பது மக்களை ஏமாற்றும் செயலாகும். இனியும் மக்களுக்கு பொய் சொல்வதை நிறுத்திவிட்டு, சர்வதேச நாணய நிதியத்துடன் இணையவழி முறையில் பகிரங்க கலந்துரையாடல் ஒன்றுக்கு வருமாறு சஜித் பிரேமதாஸ, அநுரகுமார திஸநாயக்க ஆகியோருக்கு சவால் விடுகிறேன். இதன் மூலம் அவர்கள் மேடைகளில் சொல்லும் விடயங்களின் உண்மைத் தன்மையை முழு நாட்டு மக்களும் கண்டுகொள்ள முடியும் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# அமெரிக்கா, இந்தியா, சீனா இலங்கையில் நேரடி மதிப்பீடு

## தேசிய இராஜதந்திர மையம் தகவல்

கொழும்பு, ஓக. 26

**புவிசார் அரசியல் போட்டியில் இலங்கையின் மூலோபாய முக்கியத்துவத்தின் அடிப்படையில் அமெரிக்கா, இந்தியா மற்றும் சீனா போன்ற நாடுகள் ஜனாதிபதித் தேர்தல் குறித்து நேரடி மதிப்பீடுகளை முன்னெடுத்து வருவதாக கொழும்பை தளமாக கொண்ட தேசிய இராஜதந்திர மையம் தெரிவித்துள்ளது.**

ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு முக்கிய நாடுகளின் தலையீடுகளும் கண்காணிப்புகளும் தீவிரமடைந்துள்ளன.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக, கடந்த காலங்களில் நடந்த முக்கிய தேர்தல்களைப் போலவே, நாட்டின் கீழ் மட்ட அரசியல் செல்வாக்கு மற்றும் நகர்வுகளை மதிப்பிடும் வகையில் பிராந்தியத்தில் செல்வாக்கு செலுத்தும் முக்கிய நாடுகள் பல ஆர்வத்துடன் கொழும்பில் செயல்பட்டு வருகின்றன. அனைத்து பிரதான கட்சிகளுமே கடந்த மே தினத்தை எதிர்கால தேர்தலின் அரசியல் பலத்தை வெளிப்படுத்தும் வகையில் கூட்டங்களை நடத்தியிருந்தன.

இந்தக் கூட்டங்களின் பிரதிபலிப்புகள் முக்கிய நாடுகளின் ஆர்வத்தை தூண்டியுள்ளன. இலங்கையுடன் இருதரப்பு உறவுகளை வைத்திருக்கும் சர்வதேச நாடுகள் இலங்கையின் அரசியல் முன்னேற்றங்களை அவதானிப்பது பொதுவான விடயமாகும். குறிப்பாக அமெரிக்கா, இந்தியா, சீனா, ஜப்பான் மற்றும் பிரித்தானியா உட்பட பிற மேற்கத்திய நாடுகள் ஜனாதிபதி தேர்தலின் சாத்தியமான மக்கள் ஆதரவு குறித்து தீவிரமாக கண்காணித்து வருகின்றன.

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேச விவகாரத் துறையின் துணை அமைச்சர் சன் ஹையானின் அண்மைய இலங்கை விஜயத்தின் போது நேரடியாக மக்கள் மத்தியில் சென்று கருத்து கணிப்புகளை மேற்கொண்டிருந்தார். அது மாத்திரமன்றி மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) உட்பட அனைத்து பிரதான அரசியல் கட்சிகளுடனும் பேச்சுகளையும் முன்னெடுத்திருந்தார். ஜனாதிபதித் தேர்தலில் உண்மையான நிலைப்பாட்டை அறியும் சீனாவின் ஆர்வமே இதன் மூலம் வெளிப்படுகின்றது.

குறிப்பாக சீனா, இந்தியா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளின் இலங்கை ஜனாதிபதித் தேர்தல் மீதான ஈடுபாடு பொருளாதார முதலீடுகள் முதல் புவிசார் அரசியல் செல்வாக்கு வரை அந்தந்த நலன்களைப் பாதுகாப்பதற்கான அவர்களின் முயற்சிகளின் வெளிப்பாடாகவே உள்ளது.

இலங்கை தேர்தல்களில் வெளிநாட்டு சக்திகளின் தலையீடுகள் எப்போதும் இருந்துள்ளன. ஆனால் அவற்றுக்கு எதிரான நேரடியான குற்றச்சாட்டுகளுக்கு பதிலாக மறைமுகமான சாடல்களும் இராஜதந்திர ரீதியிலான அதிருப்திகளுமே வெளிப்படுத்தப்படுகின்றன. இலங்கையை பொறுத்த வரையில் இம்முறை நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தேசிய அளவில் மாத்திரமன்றி பிராந்திய ரீதியிலும் முக்கியத்துவம் பெறுகின்றது.

எனவே, இலங்கைக்கு கடன் வழங்கிய நாடுகள் கடனை மீளப் பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் மற்றும் இலங்கையின் வளங்கள் ஊடாக பயனடைதல் போன்ற விடயங்களில் கூடுதல் அவதானம் செலுத்துகின்றன. இலங்கையின் பிரதான கடன் வழங்குநரான சீனா தனது கடன் தொகையை மீளப் பெறக் கூடிய சாதகமான சூழல் நாட்டில் உருவாவதை விரும்பும் அதேவேளை, இந்தியாவும் இலங்கையில் தனது நலன்களின்மீது ஆர்வம் செலுத்தி இராஜதந்திர நகர்வுகளை முன்னெடுத்து வருகின்றது. குறிப்பாக இந்தியாவின் ஆசிய நெடுஞ்சாலை திட்டங்கள் மற்றும் நில இணைப்புகளில் இலங்கையுடன் முனைப்புடன் செயல்படுகின்றது. இது சீனாவின் ஒரு பாதை ஒரு மண்டலம் முன் முயற்சி திட்டத்துக்கு நிகரான இந்திய திட்டம் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# புதையல் தோண்டிய மூவர் கைதாகினர்

மஹியங்கனை, ஓக. 26

புதையல் தோண்டிய மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக மஹியங்கனை பொலிஸார் தெரிவித்தனர்.

சியம்பலாண்டுவ மற்றும் மஹியங்கனை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 30 மற்றும் 32 வயதுக்கு இடைப்பட்ட மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

மஹியங்கனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மஹியங்கனை கெசல்பொத்த பகுதியில் புதையல் தோண்டுவதாக கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய, சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸ் குழுவொன்று புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த மூவரை கைது செய்ததாக பொலிஸார் கூறினர்.

புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்தப்படும் சில உபகரணங்களும் இதன்போது பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டன. (எ)

# கோட்டாவை நம்பியதால் வெட்கித் தலைகுனிந்தேன்

## சொல்கிறார் பிள்ளையான்



மட்டக்களப்பு, ஓக. 26

ஜனநாயகத்தை நம்பி ஆயுதங்களை கைவிட்டு வந்த எமக்கு தலைகுனிந்து நிற்கும் நிலை ஏற்பட்டது. கோட்டாபயவை ஜனாதிபதியாக தெரிவு செய்தமை குறித்து வெட்கித் தலைகுனிந்தேன் என்று இராஜாங்க அமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, கல்லடி சிவானந்தா தேசிய பாடசாலை விளையாட்டரங்கில் சனிக்கிழமை நடைபெற்ற "இயலும் சிறீ லங்கா" வெற்றிப் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு" என்ற திருக்குறளின் படி நாம் நன்றி மறவாது ரணில் விக்கிரமசிங்கவுக்கு மீண்டும் ஒரு தடவை சந்தர்ப்பம் வழங்க வேண்டும்.

நாட்டை மிகவும் இக்கட்டான நிலையில் இருந்து மீட்டவர் ரணில்.

சிறந்த இராஜதந்திரி என்ற வகையிலும் நாம் ஜனாதிபதியை ஆதரித்துள்ளோம். அவரை ஜனாதிபதி யாக தெரிவு செய்வதற்கும் நாம் பாராளுமன்றத்தில் உதவி செய்தோம். 2002 இல் புலிகளுடன் யுத்த நிறுத்தம் செய்யப்பட்ட போது ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்தார். அதன் பின்னரே நான் புலிகள் இயக்கத்தில் இருந்து வெளியில் வந்தேன். எதிர்காலத்தில் சாத்தியமான அதிகாரப் பகிர்வுகளை வழங்க வேண்டும். தேர்தலின் பின்னர் அதனை மேற்கொள்வதாக ஜனாதிபதி உறுதியளித்துள்ளார். அதற்காகவும் அவரை ஆதரிக்கிறோம். விவசாயம், மீன்பிடி, கைத்தொழில் துறை சார்ந்ததாக கிழக்கின் அபிவிருத்திக்கு பல திட்டங்களை ஜனாதிபதி முன்மொழிந்துள்ளார். மாகாண சபைக்கு உரிய அதிகாரங்கள் வழங்கப்படும் நிலையில் எமது பிரதேச மக்களின் கனவு நனவாகும்.

ஜனாதிபதிக்காக வீடு வீடாகச் சென்று வாக்கு சேகரிக்க இருக்கிறோம். ஜனாதிபதியின் வெற்றியில் மட்டக்களப்பு மாவட்ட மக்களும் சிறப்பான வெற்றியைக் காண்பிக்க வேண்டும். மாகாண சபைத் தேர்தல் கட்டாயம் நடத்தப்பட வேண்டும் என்பது தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் கோரிக்கையாகும். எமது வளங்களை பயன்படுத்தும் வகையில் அதிகாரப் பகிர்வு மேற்கொள்ளப்பட வேண்டும். எமது மக்களுக்குரிய உரிமைகளைப் பெற்றுத்தர வேண்டும். எமது ஜனாதிபதி பெரும்பான்மை வாக்குகளால் வெற்றிபெறுவது உறுதி என்றும் பிள்ளையான் தெரிவித்தார். (எ)

# அரசாங்க உத்தியோகத்தர்களின் 228 விண்ணப்பங்கள் நிராகரிப்பு

வவுனியா, ஓக. 26

ஜனாதிபதித் தேர்தலில் தபால் மூல வாக்களிப்புக்காக வன்னித் தேர்தல் தொகுதியில் விண்ணப்பித்த 13 ஆயிரத்து 389 அரசாங்க உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களில் 228 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பி. ஏ. சரத் சந்திர தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்காக வவுனியா மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 28 ஆயிரத்து 585 வாக்காளர்களும் மன்னார் மாவட்டத்தில் 90 ஆயிரத்து 607 வாக்காளர்களும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 86 ஆயிரத்து 889 வாக்காளர்களும் உள்ளடங்களாக வன்னித் தேர்தல் தொகுதியில் வாக்களிக்க 3 இலட்சத்து 6081 வாக்காளர்கள் தகுதி பெற்றுள்ளனர்.

இதேவேளை, 387 வாக்களிப்பு நிலையங்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

தபால் மூல வாக்கெண்ணுவதற்காக 10 நிலையங்களும் சாதாரண வாக்கெண்ணுவதற்காக 27 நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன - என்றார். (எ)

# 11 இந்திய மீனவர்களுக்கும் செப்.6 வரை விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஓக. 26


எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்டதாக இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 11 இந்திய மீனவர்களையும் விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இதன்படி, இந்திய மீனவர்கள் 11 பேரையும் எதிர்வரும் செப்ரெம்பர் 06ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

பருத்தித்துறை கடல் பகுதியில் வைத்தே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு நாகப்பட்டினத்தை சேர்ந்த 11 மீனவர்களும் கைது செய்யப்பட்டதோடு, அவர்கள் பயணித்த இழுவைப் படகும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.(எ)

# ஹயஸ் வாகனத்தை 100 மீற்றர் தூரம் காதுகளால் கட்டியிழுத்து சாதனை



யாழ்ப்பாணம், ஓக. 26

தென்மராட்சியின் சாதனை நாயகன் செல்லையா திருச்செல்வம், 1500 கிலோ எடையுள்ள ஹயஸ் வாகனத்தை 100 மீற்றர் தூரம் தனது இரு காதுகளால் கட்டி இழுத்து சாதனை படைத்துள்ளார்.

நேற்றுக் காலை 9 மணியளவில் யாழ்ப்பாணம், கொடிகாமத்திலுள்ள நட்சத்திர மஹால் முன்றிலில் ஏ - 9 வீதியில் இந்த சாதனை நிகழ்வு நடைபெற்றது.

வாகனத்தை வெற்றிகரமாக காதுகளால் இழுத்து சாதனை புரிந்த செல்லையா திருச்செல்வம் இதன்போது கௌரவிக்கப்பட்டார்.

இதேவேளை, செல்லையா திருச்செல்வம், தனது தாடியால் முன்னர் பல தடைவைகள் பல்வேறு வாகனங்களை இழுத்து சாதனைபுரிந்து சோழன் உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்தமை குறிப்பிடத்தக்கது.(எ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 26.08.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org